Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 82 சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 26ஆம் திகதி வியாழக்கிழமை (13.10.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 16 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## தங்கத்தின் விலை வீழ்ச்சி

02 பக்கம்




## ரூ.11 இலட்சத்துக்கு மலர் தட்டு ஏலம்



தம்புள்ளை விகாரையில் சுவாரஸ்யம்

02 பக்கம்

# வலி. வடக்கு ஆக்கிரமிப்புக் காணிகளை முழுமையாக சுவீகரிக்க நடவடிக்கை


MINISTRY OF TOURISM & LANDS

Land Section

•நமது விசேட செய்தியாளர்

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை முழுமையாக சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சின் மேலதிக செயலாளர் எழுத்து மூலம் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வலி. வடக்குப் பகுதியில் தற்போதும் இரண்டாயிரத்து 467 ஏக்கர் காணி படையினர் வசமுள்ளது. இதில் இராணுவத்திற்கு ஆயிரத்து 614 ஏக்கரை அளவீடு செய்யுமாறு 2022-09-23 அன்று திகதியிடப்பட்டு காணி அமைச்சின் மேலதிக செயலாளர் ஈ.ஏ.ஆர். ரேணுகாவினால் தெல்லிப்பழை பிரதேச செயலாளருக்கு சிங்கள மொழியில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கில் மீனவர்களுக்குச் சொந்தமான 212 ஏக்கரும், பலாலி வீதிக்கு கிழக்கே உள்ள 612 ஏக்கரும் விடுவிக்கப்படும் என நீண்டகாலமாகத் தெரிவிக்கப்பட்டுவந்த நிலையில், தற்போது கூண்டோடு இராணுவமயமாக்கத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, வலி. வடக்கில் படையினர் நிலைகொண்டுள்ள காணிகள் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தொடுத்த வழக்கு உயர் நீதிமன்றில் நவம்பர் மாதம் எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில், இந்நடவடிக்கைக்கு கொழும்பு காய்நகர்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச காலநிலை ஆலோசகராக எரிக்



நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை சர்வதேச காலநிலை ஆலோசகராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

"இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சிறந்த சந்திப்பை முன்னெடுத்தோம். பசுமைப் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் இலங்கையின் காலநிலை தலைமைத்துவத்திற்கான சிறந்த தொலைநோக்குடையவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவரது சர்வதேச காலநிலை ஆலோசகராக நியமிக்கப்பட்டதில் பெருமிதம் கொள்கிறேன்" - இவ்வாறு எரிக் சொல்ஹெய்ம் தனது ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

## தாயாருடனான முரண்பாட்டால் பிள்ளைகளை பாடசாலையிலிருந்து விரட்டியடித்த அதிபர்

### அநுராதபுரத்தில் சம்பவம்



தாயாருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வகுப்பறையில் கல்வி பயின்றுகொண்டிருந்த மூன்று பிள்ளைகளை அதிபர் பாடசாலையிலிருந்து விரட்டியடித்த சம்பவம் அநுராதபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

02 பக்கம்

## மந்தபோசணை அதிகரிப்பு ஏற்றுக்கொண்டது அரசு

•யோ.தர்மராஜ்

இலங்கையில் கடந்த காலங்களில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியால் 12 வீதமாகக் காணப்பட்ட மந்தபோசணைக் குறைபாடு 14 வீதமாக அதிகரித்துள்ளது. எனவே, நாட்டில் மந்தபோசணைக் குறைபாடு நூற்றுக்கு இரண்டு வீதம் அதிகரித்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம் - என சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

அப்படியே ரணில் ஐயாவையும் சஜித் ஐயாவையும் சமாதானப்படுத்தும் வேலைய எரிக் சொல்ஹெய்மிடம் கொடுத்துவிட்டா என்னங்கோ?



## அரச நலன்புரித் திட்டத்துக்கு 23 இலட்சம் விண்ணப்பங்கள்

'எவரையும் கைவிடாதீர்கள்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்கும் துரித வேலைத்திட்டத்துக்கு நேற்று (12) வரை 23 இலட்சம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## புதிய புரட்சி; பிரித்தானிய நாடாளுமன்றில் ரோபோ உரை



02 பக்கம்

## அமைதிப்படைக் காலத்தில் கொல்லப்பட்டோருக்கு அஞ்சலி



06 பக்கம்

## வரித் திருத்தங்கள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும்

### எதிர்க்கட்சி கோரிக்கை

•யோ.தர்மராஜ்

நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வரித் திருத்தங்கள் மேலும் விவாதிக்கப்பட வேண்டும் என்பதோடு, அவை மேலும் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

02 பக்கம்

## உணவு - பொருளாதாரத்திலும் நாட்டின் பாதுகாப்பு தங்கியுள்ளது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

02 பக்கம்




மஹிந்தவை காட்டி அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்ளவே அவரை வைத்து களுத்துறையில் கூட்டம் நடத்தியதாக மஹிந்தானந்த ,ஜோன்ஸ்டன் மீது பொதுஜன பெரமுனவுக்குள் எதிர்ப்புகள் வந்துள்ளதாம்.இதனால் மஹிந்தவை பொதுக்கூட்டங்களுக்கு இப்போதைக்கு அனுப்புவதில்லையென தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

## வறுமைக்கோட்டுக்குக் கீழ் 24 இலட்சம் குடும்பங்கள் 96 இலட்சம் தனி நபர்கள்

•யோ.தர்மராஜ்

தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இலங்கையில் 7 இலட்சமாக காணப்பட்ட வறுமையில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை தற்போது 24 இலட்சமாக அதிகரித்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

02 பக்கம்

## வருமான வரிக் கட்டமைப்பில் புதிய திருத்தங்கள் அறிமுகம்

### தனி நபருக்கான எல்லை ஒரு இலட்சம் ரூபாவாக குறைப்பு

•யோ.தர்மராஜ்



உத்தேச உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்டமூலத்திற்கு அமைய வரிக் கட்டமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளதுடன், அதற்கான திருத்தப்பட்ட சட்டமூல வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் என்றவகையில், ஜனாதிபதியால் அண்மையில் முன்வைக்கப்பட்ட இடைக்கால...

02 பக்கம்

## அரச நலன்புரித் திட்டத்துக்கு...

அவற்றுள் 06 இலட்சத்து 24 ஆயிரத்து 714 விண்ணப்பங்கள் நேற்று (12) வரை தரவுக் கட்டமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் உள்ள 341 பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள நலன்புரி உதவித் தகவல் அலகுகள் மூலம் அனைத்து விண்ணப்பங்களும் உடனடியாக இத்தரவுக் கட்டமைப்பில் உள்வாங்கப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான முன்னோடி திட்டம் அண்மையில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள சில பிரதேச செயலகங்களை மையமாகக் கொண்டு இடம்பெற்றதுடன், மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

தற்போது நலன்புரித்திட்ட உதவிகளைப் பெற்றுக்கொண்டிருக்கும் அல்லது காத்திருப்புப் பட்டியலில் உள்ள 3.3 மில்லியன் குடும்பங்களுக்கு மேலதிகமாக ஆறு இலட்சம் குடும்பங்கள் கொவிட் இரண்டாம் அலை மற்றும் இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி காரணமாக புதிதாக குறைவருமான நிலையை அடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த 06 இலட்சம் குடும்பங்களும் இதற்காக விண்ணப்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி, இந்த சமூகநலத் திட்டத்திற்கு 3.9 மில்லியன் குடும்பங்கள் விண்ணப்பிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 39 இலட்சம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் நலன்புரி உதவிகளைப் பெறவுள்ளன. 06 கட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்படும் இத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையின் போதே, இரண்டாம் கட்டப் பணிகளும் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும், அடுத்த கட்டமாக வீட்டு அலகுகளுக்குச் சென்று தரவுகளை சேகரிக்கவுள்ளதாகவும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

சமுர்த்தி, முதியோர், மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோயாளிகள் என்ற அடிப்படையில் ஏற்கனவே நலன்புரி உதவிகள் பெற்று வருபவர்களும் புதிதாக நலத்திட்ட உதவிகள் பெற விரும்புவோரும் இதில் பதிவுசெய்ய வேண்டும்.

அதற்காக, பதிவு செய்வதற்கான மாதிரி விண்ணப்பப் படிவங்கள் 30.08.2022 அன்று வெளியிடப்பட்டுள்ளதோடு, 29.09.2022 வரை, தரவுக் கட்டமைப்பில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை நெருங்கியுள்ளது.

எனினும், அண்மையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட பிரசாரப் பணிகள் காரணமாக 23 இலட்சம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக குறிப்பிடும் நலன்புரி நன்மைகள் சபை, விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி ஒக்டோபர் 15 எனவும் நினைவுகூர்ந்துள்ளது.

தகுதியான விண்ணப்பதாரர்களின் பட்டியல் டிசம்பர் 15ஆம் திகதி பிரதேச செயலக மட்டத்தில் அறிவிக்கப்படும் எனவும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

## புதிய புரட்சி...

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் மனித ரோபோ உரை நிகழ்த்தி சாதனை நிகழ்த்தியுள்ளதுடன், உலகளாவிய ரீதியில் நவீன தொழில்நுட்பத்தின் புரட்சியென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெண் உருவம் கொண்ட இந்த ரோபோவுக்கு ஐ-டா எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தான் உயிருடன் இல்லாவிட்டாலும் கலையை உருவாக்கும் திறன் கொண்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ரோபோ கூறியுள்ளது.

சித்திரம் வரைய, கவிதை எழுத முடியும் என்றும் அதற்காக நரம்பியல் ஒழுங்கமைப்பை பயன்படுத்துவதாகக் கூறியுள்ள ரோபோ, அவற்றைப் பற்றி பேச முடிந்தாலும் அகநிலை அனுபவங்கள் இல்லையெனத் தெரிவித்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் நவீன மற்றும் சமகால கலையியல் நிபுணரான ஐடன் மெல்லர் என்பவரால் இந்த ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வருமான வரிக் கட்டமைப்பில்...

வரவு – செலவுத்திட்டத்துக்கமைய, உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்டமூலத்துக்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியதற்கு அமையவே, இந்த வரித் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய, தற்போது 2 இலட்சம் ரூபாவாகவுள்ள தனிநபர் மாத வருமான வரி எல்லை, ஒரு இலட்சம் ரூபா வரையில் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரித் திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக புதிய வரிகளை விதித்தல், வரி வீதங்களை அதிகரித்தல் என்பனவற்றை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தனிநபர் வருமான வரி அறவீடு தொடர்பான புதிய வரி வீதங்கள் இதனூடாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதுடன், ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் தனிநபர் வரி வீதத்தில் அதிகரிப்பு காணப்படும் என கே.பி.எம்.ஜி. கணக்காய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, தற்போது தனிநபர் வருமான வரி வீதம் நூற்றுக்கு 6, 12 மற்றும் 18 என்ற அளவில் காணப்படுவதுடன், இதில் 18 வீதமாகமுள்ள உச்சபட்ச வரி வீதம் 36 வீதம் வரையில் அதிகரிக்கும் என நிறுவகம் அறிவித்துள்ளது.

அத்துடன், நிறுவனங்கள் தரப்பில் 14 மற்றும் 18 வீதமாக உள்ள வரிகள், 30 வீதமாக அதிகரிக்கவுள்ளதுடன், சுற்றுலாத்துறை வரியானது 14 வீதமாகவும், உற்பத்தி நிறுவனங்கள் தொடர்பான வரியானது 18 வீதமாகவும் காணப்படுவதோடு, இவை 30 வீதமாக அதிகரிக்கவுள்ளதாக கே.பி.எம்.ஜி. கணக்காய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

## தங்கத்தின்...

கொழும்பு, செட்டியார் தெருவில் தங்க நகைகளின் விலை நேற்று (12) வீழ்ச்சியடைந்தது. அதன் பிரகாரம் கடந்த சில நாட்களில் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட 22 கெரட் தங்கம் ஒரு இலட்சத்து 55 ஆயிரம் ரூபா முதல் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா வரை விற்பனையானது.

இதேவேளை, 24 கெரட் தங்கம் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபா முதல் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வரை விற்பனையானது. அது, கடந்த சில நாட்களுக்கு முன்னர் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு விற்பனையானமை குறிப்பிடத்தக்கது.

## ரூ. 11 இலட்சத்துக்கு...

**கே.கே.ஆரியதாச**

தம்புள்ளை, கிரலெஸ்ஸ புஷ்பாராம விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது மலர் தட்டு ஒன்று 11 இலட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

மேலும் பாடல் ஒன்றைப் பாடுவதற்கு ஐயாயிரம் ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், நான்காயிரம் தேங்காய்கள் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனைசெய்யப்பட்டுள்ளன.

இந்த விகாரைக்கு நிதி திரட்டும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்விலேயே இந்த சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் முதல் நேற்று அதிகாலை வரை இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது. ஆடல், பாடல் களியாட்டங்களுடன் மலர் தட்டுகள், பூஜைப் பொருட்கள் ஏலத்தில் விடப்பட்டுள்ளன.

இதன்போது சகோதரர்கள் மூவர் இணைந்து மலர் தட்டை 11 இலட்சம் ரூபா ஏலத்துக்கு பெற்றுக்கொண்டுள்ளனர்.

## தாயாருடனான முரண்பாட்டால் ...

அநுராதபுரம் பகுதி பாடசாலையொன்றில் இடம்பெற்ற இச்சம்பவத்துக்கு பெற்றோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

வகுப்பறையில் பிள்ளைகள் இருந்தபோது அவர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில், அவர்கள் மூவரும் நுழைவாயிலுக்கு முன்பாக வெகுநேரம் காத்துக்கொண்டிருந்துள்ளனர்.

இதன்காரணமாக பெற்றோர் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மூன்று பிள்ளைகளின் தாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் பதிவுசெய்துள்ளார். இதுதொடர்பில் பாடசாலையின் அதிபரிடம் வினவியபோது, தாயார் தகாத வார்த்தைகளால் தன்னைத்திட்டியதாகவும் அதனாலேயே இவ்வாறு நடந்துகொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

## மந்தபோசணை ...

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் இன்னுமொரு 5 – 10 வருடங்களில் மரணிக்கலாம். ஆனால், மந்தபோசாக்கினால் எங்களுடைய குழந்தைகள் மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டால் என்றோ ஒரு நாள் நாங்கள் அந்த சாபத்துக்கு உள்ளாகுவோம். எனவே, தற்போதைய நிலையில் மக்கள் அடிப்படைத் தேவைகளை அடையாளம் காண வேண்டும்.

அதன்படி, மக்களின் பட்டினி, குழந்தைகளின் மந்தபோசணை மற்றும் கர்ப்பிணிகளின் போசணை குறைபாடுகளை நிவர்த்திசெய்ய வேண்டும்.

மாறாக, நோயற்ற சமூகத்தை உருவாக்குவதற்கு ஏதேனும் தடை ஏற்பட்டால், அதனை நிவர்த்திசெய்வதற்கு நான் முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவோன்.

மந்தபோசணை குறைபாட்டை முற்றாக நிவர்த்திசெய்ய முடியுமெனக் கூறினால் அது கற்பனை கதையாகும். இலங்கையில் மந்தபோசணை 12 வீதமாகக் காணப்பட்டது. ஆனால், தற்போது 14 வீதமாக அதிகரித்துள்ளது. எனினும், நாங்கள் அதனை 10 வீதமாக குறைப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். எனவே, நாட்டில் மந்தபோசணை குறைபாடு நூற்றுக்கு இரண்டு வீதம் அதிகரித்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றோம் - என்றார்.


## பெயர் மாற்றம்

கற்பிட்டி அல்மனார் மண்டலக்குடாவில் வசிக்கும் அந்தோனி சுரங்க ஆகிய நான் 2017ஆம் ஆண்டு முதல் இஸ்லாம் மதத்தினை தழுவி எனது பெயரை மொஹமட் உமர் (Mohamed Umar) என மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

-மொஹமட் உமர்-


# சிறுவர்களைப் பாதுகாப்பது அரசின் தலையாய பொறுப்பு

## அவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் பொலிஸாருக்குப் பணிப்புரை



ஆர்ப்பாட்டங்களில் சிறுவர்களை கேடயமாக பாவிப்பது நாட்டின் சட்டத்தின் பிரகாரம் பாரிய குற்றமாகும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிறுவர்களை ஆர்ப்பாட்டங்களுக்கு அழைத்துச் செல்வதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று (12) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

“குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் உடல், உள ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், மத, சமூக ரீதியாகவும் முழுமையாக வளர்ச்சி காண்பதை உறுதிசெய்வதற்கும், அவர்கள் சுயநல தேவைகளுக்காக பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கும், பாகுபாடு காட்டப்படுவதில் இருந்து அவர்களைப் பாதுகாக்கவும் ஏற்றவகையில் அவர்களின் நலனை மேம்படுத்துவற்காக அரசாங்கம் விசேட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்” என்று அரசியலமைப்பின் 27ஆம் சரத்தின் 13ஆவது உப சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, குழந்தைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பு என்றும் வலியுறுத்தினார்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புகளை, இலங்கை பொலிஸார் மற்றும் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு வழங்கவும் இதன் போது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சிறுவர்களை பாலியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு எதிராகவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டமொன்றை அவசரமாகதயாரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்ட மா அதிபருடன் ஆலோசனை நடத்தி, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்குச் செல்ல முற்பட்ட நிலையில் கைதுசெய்யப் பட்டவர்களிடையே இருக்கும் சிறுவர்கள் பெற்றோரிடமிருந்து பிரித்துவைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமது கவனத்தை செலுத்திய ஜனாதிபதி, அவர்களை பெற்றோரிடம் தங்கவைக்க ஏற்பாடு செய்யுமாறும் அறிவித்துள்ளார்.

சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் கல்வி மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்திய ஜனாதிபதி, சிறுவர் இல்லங்களில் உள்ள விசேட தேவையுடைய சிறுவர்களை இனங்கண்டு, அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

சிறுவர் இல்லங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதன்மூலம் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தவிர்க்க முடியும் எனவும் தெரிவித்தார்.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## வரி திருத்தங்கள் குறித்து...

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பொருளாதார மறுசீரமைப்புகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், இந்த மறுசீரமைப்புகள் அனைத்தும் மக்கள், மத்திய வர்த்தகர்கள், தொழில் நிறுவனங்கள் என்பவற்றை சீர்குலைக்காத வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாங்கள் ஒரு சத்திரசிகிச்சை மேற்கொள்வதாயின் அதனூடாக நோயாளி காப்பாற்றப்பட வேண்டும். தான் செய்த சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. ஆனால், நோயாளி மரணித்துவிட்டாரென யாரேனும் வைத்தியர் கூறினால் அதில் எவ்வித பயனு மில்லை.

பீ.பி.ஜயசுந்தர, நிவார்ட் கப்ரால், பெசில் ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் நாட்டில் வரி தேவையில்லை. அதற்குப் பதிலாக அமெரிக்காவில் வரியை குறைத்து பணத்தை அச்சிடுவது போன்று நாங்கள் நடைமுறைப்படுத்தலாம் என்ற கதைகளைக் கூறி, வரியை குறைத்து அதற்குப் பதிலாக பணத்தை அச்சிட்டனர். இதனால், இன்று உணவுக்கான பணவீக்கம் 96.5 ஆகக் காணப்படுகின்றன. உலகில் அதிக உணவு பணவீக்கம் கொண்ட நாடாக நாங்கள் இருக்கின்றோம்.

மக்களின் சொத்துகள் 50 வீதத்தால் குறைவடைந்துள்ளன. ரூபாவின் பெறுமதி 60 வீதத் தால் வீழச்சியடைந்துள்ளது. இவ்வருடத்தில் பொருளாதார வளர்ச்சி மறை 9.2 ஆக காணப்படு வதோடு, அடுத்த வருடத்தில் மறை 4.5 ஆக காணப்படும் என உலக வங்கி கூறுகின்றது.

இந்நிலையில், நாட்டில் வரி மறுசீரமைப்புகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், இந்த மறுசீரமைப்புகள் மக்களாலும் நிறுவனங்களினாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால், எங்களுடைய சர்வாதிகாரிகள் எவ்வித கணிப்பீட்டையும் முன்னெடுக்காது, எதிர்க்கட்சிகள் கூறுவதையும் கேட்காது, தான்தோன்றித்தனமான முடிவுகளை எடுத்து நாட்டை முற்றாக சீர்குலைத்து இன்று வறுமையான நாடாக மாற்றியுள்ளனர். எனவே, நாட்டில் சர்வாதிகார வரித் திருத்தங்கள் மேலும் விவாதிக்கப்பட வேண்டும் என்பதோடு, இவை மேலும் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் - என்றார்.

## உணவு, பொருளாதாரத்திலும்...

நாட்டின் பாதுகாப்பு இராணுவத்தில் மட்டுமன்றி உணவு மற்றும் பொருளாதார பாதுகாப்பிலும் தங்கியிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (11) முற்பகல் நடைபெற்ற தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணையை உறுதிசெய்யும் நிகழ்ச்சி தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணையை உறுதிசெய்யும் நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்தும்போது அரச பொறிமுறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக் காரணமாக ஏதேனும் பிரச்சினைகள் உருவாகுமாயின் அதனை சரிசெய்வதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் தலையிடுவதற்குத் தயார் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கூடாக விவசாயத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை இயற்றவேண்டியதன் அவசியம் தொடர்பிலும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

‘எந்தவொரு பிரஜையும் உணவின்றி பசியால் வாடக்கூடாது’ என்ற தொனிப்பொருளில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிசெய்வதற்கு கிராமிய பொருளாதார மேம்பாட்டு மையத்தை பலப்படுத்தும் பல் துறைகளின் ஒன்றிணைந்த பொறிமுறையொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின்பேரில் அண்மையில் நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அவ்வேலைத்திட்டத்தின் மாவட்ட மட்ட முன்னேற்றம் தொடர்பில் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. மேலும் அனைத்து மாவட்டங்களிலும் கிராம மட்டத்தில் கிராமிய பொருளாதார மேம்பாட்டுக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள் ளதாகவும், உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்வதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்றவகையில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் தடைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதன்போது, எரிபொருள் மற்றும் தேவையான உரத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும், காணிப் பிரச்சினை, விதைப் பற்றாக்குறை, வனவிலங்குகளால் ஏற்படும் சேதங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப் பட்டது.

வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் மாவட்ட செயலாளர்களால் முன்வைக் கப்பட்ட முன்னேற்றங்கள் குறித்து அவதானம் செலுத்திய ஜனாதிபதி, உணவுப் பாதுகாப்பை உருவாக்குவதற்கும், கிராம மட்டத்தில் மேற்கொள் ளப்படும் பயிர்ச் செய்கைகளை தனித்தனியாக இனங்காணு வதற்குமென உணவுப் பற்றாக்குறை நிலவுகின்ற பிரதேசங்களை இனங்கண்டு அது தொடர்பில் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் மாவட்டந் தோறும் மாவட்ட செயலாளர்கள் தலைமையில் உணவு வங்கி மற்றும் சமூக சமையலறை ஆகிய வேலைத்திட்டங்களை செயல்படுத்த திட்டமிடுமாறும் தெரிவிக்கப் பட்டது.

அரச சேவையில் தற்போது தேவைக்கு அதிகமான வர்கள் இருப்பதால் அவர்கள் அனைவரையும் இந்த வேலைத்திட்டத்தில் இணைத்துக்கொள்வது தொடர்பில் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, முப்படை வீரர்கள், சிவில் பாதுகாப்புப் படையினர், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப் பையும் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

2023ஆம் ஆண்டுவரை இத்திட்டத்தை தொடர்ந்து அமுல்படுத்துமாறும். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உலகப் பொருளாதார நெருக்கடிக்குத் தயாராகுவதற்கும் மக்களின் போஷாக்கு தேவையை உறுதிப்படுத்துவதற்கும் இத்திட்டத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

மூன்று வாரங்களின் பின்னர், வாரத்திற்கு ஒருமுறை இவ்வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, புதிதாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றவர்களுக்கு காணிகள் வழங்குவதை துரிதப்படுத்தல் மற்றும் அதற்காக முறையான பொறிமுறையொன்றை பின்பற்றுவதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று எதிர்வரும் மழைக்காலம் புதிய பயிர்ச்செய்கைக்கு பொருத்தமாக உள்ளதனால், தாமதமின்றி பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு கிராம மட்டத்தில் மக்களை தெளிவூட்டுவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் பிரதமர் இங்கு விளக்கமளித்தார்.

அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட மற்றும் துறைசார் அமைச்சுகளின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## வறுமைக்கோட்டுக்குக் கீழ்...

அத்தோடு, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தனிநபர்களின் எண்ணிக்கை 96 இலட்சமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் வறுமை குறித்து நடத்தப்பட்ட ஆய்வு தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவானது நாட்டின் வறுமை தொடர்பான ஆய்வொன்றை முன்னெடுத்தது. அதன்படி, தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இலங்கையில் 7 இலட்சம் குடும்பங்களே வறுமையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அந்தத் தொகை தற்போது 24 இலட்சம் குடும்பங்களாக அதிகரித்து வருவதை எங்களால் காணமுடிகின்றது.

இதேவேளை, 2019ஆம் ஆண்டு அறிக்கையின்படி 30 இலட்சம் தனிநபர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்ந்தனர். ஆனால், தற்போது அந்தத் தொகை 96 இலட்சமாக அதிகரித்துள்ளது. நாட்டில் வாழும் மக்கள் தொகையில் 42 வீதமானவர்கள் வறுமையில் வாழ்கின்றனர் என்பதை எங்களுடைய ஆய்வில் கண்டறிய முடிந்தது.

அதேபோன்று, உலக வங்கியினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின்படி இலங்கையில் 26 வீதமானவர்களே வறுமையில் வாழ்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அதனை விட அதிக வீதமானோர் வறுமையில் வாழ்கின்றனர் என்பது எங்களுடைய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், இவ்வருடம் நிறைவடையும்போது, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 9.2 ஆக வீழ்ச்சிடையும் என உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வாறு நடந்தால் இலங்கையில் 28 இலட்சம் குடும்பங்கள் வறுமைக்குத் தள்ளப்படும். அவ்வாறாயின் இவ்வருடத்தில் 60 வீதமான மக்கள் வறுமையில் தள்ளப்படுவார்கள்.

எனவே, பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதுடன், அரசாங்கத்தின் தேவையற்ற செலவுகளையும் முடிந்தவரை குறைத்தல், நிதி அச்சிடுதல் குறைத்தல், நேரடி வரியை கட்டம் கட்டமாக குறைத்தல் போன்ற மறுசீரமைப்புகளை செய்தால், 6 மாதங்களில் நாட்டை சாதாரண நிலைமைக்குக் கொண்டுவர முடியும் - என்றார்.

# எரிக் சொல்ஹெய்ம் - மஹிந்த சந்திப்பு



இலங்கைக்கு விசேட சுற்றுபயணத்தை மேற்கொண்டுள்ள நோர்வே முன்னாள் அமைச்சர் எரிக் சொல்ஹெம் மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று (12) கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகராக நியமிக்கப்பட்டமைக்கு மஹிந்த ராஜபக்ஷ, சொல்ஹெய்முக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் புலிப் பயங்கரவாதிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தையாளராக சொல்ஹெய்ம் இலங்கைக்கு வழங்கிய பங்களிப்பை நினைவுகூர்ந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சொல்ஹெய்ம் ஆகியோர் இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்தும் கலந்துரையாடியதுடன், குறிப்பாக பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவுவதற்காக நோர்வே முதலீட்டாளர்களை நாட்டில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுத்தார். கடல்சார் திட்டங்களில் நோர்வே முக்கிய பங்காற்ற முடியும் என்று கூறிய மஹிந்த ராஜபக்ஷ, இது போன்ற முக்கிய திட்டங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு வழங்கும் என்றும் கூறினார்.

இலங்கைக்கு நோர்வேயின் ஆதரவை உறுதிப்படுத்துவது குறித்தும், இரு நாடுகளும் எவ்வாறு இணைந்து செயல்படுவது என்பது குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் உயர்கல்வி அமைச்சர் சுரேன் ராகவனும் கலந்துகொண்டிருந்தார்.

# போராட்டக்களங்களுக்கு சிறுவர்களை அழைத்துவருவது தொடர்பில் பல்வேறு தரப்பிலுமிருந்து முறைப்பாடுகள்

## அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அதிகார சபை கோரிக்கை

போராட்டக்களங்களுக்கு சிறுவர்களை அழைத்துச் செல்வது குறித்து பல்வேறு தரப்பினரிட மிருந்து முறைப்பாடு கிடைப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

காலிமுகத்திடலில் அண்மையில் இடம்பெற்ற போராட்டத்தின்போது பொலிஸாரின் நடவடிக்கையினால் குழந்தையொன்று பாதிப்புக்கு உள்ளானமை தொடர்பிலும், சிறுவர்களை போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிராகவும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

போராட்டக்களங்களுக்கு சிறுவர்களை அழைத்து வருதல் அல்லது போராட்டங்களுக்கு சிறுவர்களை பயன்படுத்துவது குறித்து விளக்கமளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் போன்ற விடயங்களில் சிறுவர்களை பங்கேற்க வைப்பதன் மூலம் அவர்கள் பாதிக்கப்படலாம். அவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். அதனையும் மீறி சிறுவர்களை போராட்டக்களங்களில் பயன்படுத்து வதால் அவர்களின் பாதுகாப்புக்கு மேலும் பங்கம் ஏற்படலாம்.

இதுவரை கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தின் பின்னர்




சுகயீனமுற்றுள்ளதாக கூறி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குழந்தை வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளது.

போராட்டங்கள் போன்ற சந்தர்ப்பங்களில் குழந்தைகளை அழைத்து வருவது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்று குழந்தையின் உடல்நிலை குறித்து கருத்து தெரிவிக்கையில் வைத்தியசாலையின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ஜி. விஜேசூரிய குறிப்பிட்டுள்ளார்.

# அஹுங்கல்ல பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம்




அஹுங்கல்ல பிரதேசத்தில் நேற்று (12) இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் முச்சக்கரவண்டி சாரதியொருவர் படுகாயத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபரின் முச்சக்கரவண்டியை அஹுங்கல்ல வீதியில் நிறுத்தி வைத்திருந்தபோது, காரில் வந்த சிலர் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டதரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அஹுங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

# சிறுமியை கொடூரமாகத் தாக்கிய பெண் கைது





ஒன்பது வயது சிறுமியை துன்புறுத்தலுக்கு உட்படுத்திய 29 வயதுப் பெண்ணொருவர் கடுவலை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடுவலை கனிஷ்ட வித்தியாலயத்தில் நான்காம் தரத்தில் கல்வி கற்றுவரும் குறித்த சிறுமி, அவருக்கு இடம்பெறும் துன்புறுத்தல்கள் தொடர்பில் பாடசாலையில் உணவு வழங்கும் பெண்ணிடம் கூறியதை அடுத்து அவர் சிறுமியின் வகுப்புக்கு பொறுப்பான ஆசிரியைக்கு அறிவித்துள்ளார்.

அதன் பின்னர், ஆசிரியையின் அறிவிப்பை தொடர்ந்து பாடசாலை அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட சிறுமியுடன் சென்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதனையடுத்தே குறித்த பெண் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

குறித்த சிறுமியின் தந்தையினுடைய இரண்டாவது மனைவியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், பாதிப்புக்குள்ளான சிறுமி, முல்லேரியா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டதாகவும் கடுவலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கான் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

# கூட்டமைப்பின் வினோ எம்.பி. வைத்தியசாலையில் அனுமதி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகதாரலிங்கம் நேற்று முன்தினம் (11) யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாரடைப்பு காரணமாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினரின் உடல்நிலை தேறி வருவதாகவும், வைத்தியரின் ஆலோசனைக்கு அமைவாக வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தேசிய போஷாக்கு நிதியத்தை ஸ்தாபிக்க கல்வி அமைச்சு திட்டம்

பாடசாலை மாணவர்களின் போஷாக்கு திட்டத்திற்கான நிதியை பெற்றுக் கொள்வதற்குரிய தேசிய போஷாக்கு நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலுள்ள தனி நபர்களோ அல்லது நிறுவனங்களோ தேசிய போஷாக்கு நிதியத்திற்கான ஒத்துழைப்பை வழங்க முடியும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த தேசிய போஷாக்கு நிதியத்தின் ஒதுக்கீடுகளூடாக, பாடசாலை மாணவர்களின் போஷாக்கு தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த தேசிய போஷாக்கு நிதியத்தை ஸ்தாபிப்பதற்கான அமைச்சரவை அனுமதியை விரைவில் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

# மாணவர் நாடாளுமன்றங்களில் இலத்திரனியல் வாக்குப்பதிவு முறைமை!

## திட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கையும் ஆதரவு

நாடு முழுவதிலும் நடைமுறையிலுள்ள மாணவர் நாடாளுமன்றங்களில் இலத்திரனியல் வாக்குப்பதிவு முறைமையை உருவாக்க இலங்கை நாடாளுமன்றம் தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

இதற்கான ஆரம்பமாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சியொன்று இலங்கை நாடாளுமன்றத்தினால் அண்மையில் எஹலியகொட தேசிய பாடசாலை மாணவர் நாடாளுமன்றத்தில் இலத்திரனியல் வாக்களிப்பு முறையைப் பயன்படுத்துவது தொடர்பில் நடத்தப்பட்டது.

“மாணவர் நாடாளுமன்றதில் இலத்திரனியல் வாக்குப்பதிவுக்கு உதவி” என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இலங்கை நாடாளுமன்றத்தின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டதுடன், இதில் மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்களும் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

வாக்குகளைத் தெரிவிப்பதற்கு இலத்திரனியல் பொறிமுறையொன்றைப் பயன்படுத்துவதன் ஊடாக வாக்குச்சீட்டை அச்சடிப்பது மற்றும் வாக்குப்பெட்டி போன்றவற்றுக்காக மேற்கொள்ளப்படும் செலவு மற்றும் வாக்கு எண்ணுவதற்காக எடுக்கப்படும் நேரம், காலத்தையும் குறைக்க முடியும் என்பது நவீன தேர்தல்முறை நிபுணர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைப்பாடாகும்.





வாக்காளர்களைப் பதிவுசெய்வது முதல், வாக்களிப்பு தினத்தில் வாக்குகளைப் பதிவுசெய்து இறுதி முடிவை அறிவிக்கும் வரையிலுள்ள ஒவ்வொரு கட்டத்திலும் எந்தத் தவறுமின்றி இந்த இலத்திரனியல் வாக்குப்பதிவுப் பணிகளை பிழையின்றி பராமரிக்க மேற்கொள்ள வேண்டிய தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகள் குறித்துப் நாடாளுமன்ற உயர்மட்ட அதிகாரிகள் மாணவர்களுக்கு விளக்கமளித்தனர்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள எஹலியகொட தேசிய பாடசாலையானது இவ்வருடம் தமது மாணவர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு இலத்திரனியல் வாக்களிப்பு முறையைப் பயன்படுத்தியுள்ளமை மிகவும் நம்பிக்கையான போக்கு எனப் நாடாளுமன்ற அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

ஒன்லைன் முறையில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் இலங்கை நாடாளுமன்றத்தின் தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் மகேஷ் பெரேரா மற்றும் குறித்த திணைக்களத்தின் அதிகாரிகளான நரேந்திர லக்மால் மற்றும் சமிந்த வில்லோ ஆராச்சி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதனைவிடவும் இலங்கை நாடாளுமன்றத்தின் இணைப்புப் பொறியியலாளர் திணைக்களத்தின் பணிப்பாளர் லலித் அதிகாரி நாடாளுமன்றத்தின் இலத்திரனியல் வாக்குப்பதிவு தொடர்பான அனுபவத்தை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார். நாடாளுமன்றத்தின் சட்டவாக்கம் மற்றும் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜனகாந்த சில்வா எஹலியகொட மாணவர் நாடாளுமன்றத்திற்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

# மினுவாங்கொடை படுகொலை விவகாரம்;

## பிரதான சந்தேகநபர் தொடர்பில் தகவல் கிடைத்தால் அறிவிக்குமாறு கோரிக்கை

பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் தேடப்பட்டுவரும் நபரொருவரை கண்டுப்பிடிப்பதற்காக பொலிஸார் பொதுமக்களின் ஒத்துழைப்பை கோரியுள்ளனர்.

மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கமங்கெதர பிரதேசத்தில் கடந்த 06ஆம் திகதி துப்பாக்கிச் சூடு நடத்தி, மூவரை கொலை செய்த குற்றச்செயல் தொடர்பில் தேடப்பட்டுவரும் பிரதான சந்தேகநபர் அந்த பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், குறித்த சந்தேகநபரை கைதுசெய்வதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு கோரியுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலக்கம்-10, மஹிந்தாராம வீதி, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய ஜயகொடகே சஞ்சீவ தோன சஞ்சீவ லக்மால் (அடையாள அட்டை இலக்கம் - 833214292 ஏ ) என்பவரே இவ்வாறு பொலிஸாரினால் தேடப்பட்டு வருகிறார்.

அதற்கமைய, புகைப்படத்திலுள்ள சந்தேகநபர் தொடர்பில் தகவல் கிடைத்தால் கம்பஹா சிரேஷ்ட



பொலிஸ் அத்தியட்சகர் - 0718591608, கம்பஹா உதவி பொலிஸ் அத்தியட்சகர் - 0718591610, மினுவாங்கொடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி - 0718591612 ஆகிய இலக்கங்களுக்கு உடனடியாக அறிவிக்குமாறும் பொலிஸ் ஊடகப்பிரிவு கோரியுள்ளது.

# திக்கோவிட்ட மதுபானசாலைத் திருட்டு சம்பவம்

## சந்தேகநபரினால் கொள்ளையடிக்கப்பட்ட மேலும் சில பொருட்கள் கைப்பற்றல்

திக்கோவிட்ட மதுபானசாலையில் கொள்ளையடிக்கவந்த நிலையில், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களினால் திருடப்பட்ட சில பொருட்கள் மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நிலையில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களினால் நிட்டம்புவ, கம்பஹா, கடவத்தை ஆகிய பிரதேசங்களிலிருந்த விற்பனை நிலையங்கள் மூன்றிலேயே இந்த பொருட்கள் திருப்பட்டுள்ளன. முச்சக்கரவண்டி உதிரிபாகங்கள், டயர் போன்ற பொருட்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளதுடன், இந்த பொருட்களுடன் சந்தேகநபரொருர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக குற்றத்தடுப்பு பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட பொருட்களின் பெறுமதி 10 இலட்சம் ரூபா என குற்றத்தடுப்பு பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையில் நீதித்துறைக் கட்டமைப்பை மறுசீரமைப்பதன் அவசியம்

## பொதுமக்கள் கேள்விகளுக்கு ட்விட்டர் ஸ்பேஸ் ஊடாக நேரடியாகப் பதில்

இலங்கையில் நீதித்துறைக் கட்டமைப்பை மறுசீரமைப்பதன் அவசியம் தொடர்பில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ கலந்துகொள்ளும் நேரடி ட்விட்டர் கலந்துரையாடல் நாளை (14) காலை 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணி வரை நாடாளுமன்ற உத்தியோகபூர்வ ட்விட்டர் (@ ParliamentLK) கணக்கினூடாக இடம்பெறவுள்ளது.

இந்நாட்டில் நீதித்துறைக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள், அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் சிறைச்சாலை கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பான பொதுமக்கள் கேள்விகளை LKaskMP ஊடாக முன்வைக்க முடியும் என்பதுடன், அன்றைய தினம் நேரடியாக இணைந்து கொண்டும் கேள்விகளை முன்வைக்க முடியும்.

விசேடமாக ஒக்டோபர் 19 ஆம் திகதி நீதி அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ள 6 சட்டமூலங்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளன.

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் (திருத்தச்) சட்ட மூலம், நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம், அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம், ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமூலம், விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்ட மூலம், மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் என்பன விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளன என்பதுடன், இது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப் படவுள்ளது.

நாடாளுமன்றத்திற்காக மக்கள் பிரதிநிதிகளையும் பொதுமக்களையும் நேரடியாக தொடர்புபடுத்தும் வகையில் நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் இந்த நேரடி டுவிட்டர் கலந்துரையாடல் தொடரை ஏற்பாடு செய்துவருகின்றது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஒக்டோபர் 13ஆம் திகதி, வியாழக்கிழமை

# இளைய சமூகத்தைக் காப்பாற்றுங்கள்!

கொழும்பில் ஐஸ் போதைப்பொருள் பாவனையால் வாரத்திற்கு இருவர் மரணமடைகின்றனர். அவர்களில் புத்தி பேதலித்து தற்கொலை செய்பவர்கள் அதிகம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

சமூகத்தில் சும்மா யாரிடமாவது பேச்சுக்கொடுத்தால் அவரின் நண்பர்கள் வட்டாரத்தில் ஒருவராவது ஐஸ் போதைப்பொருள் பாவனையில் இருப்பது தெரியும் என்ற அளவில் இந்த நச்சு ஊடுருவியிருக்கிறது. இந்த ஐஸ் போதைப்பொருள் பாவனை உடம்பை உருகி, எக்ஸ்ரே எடுக்கத் தேவையில்லை என்ற அளவில் உடம்பு குன்றிவிடுகிறது. இதற்கு அடிமையானோரால் அதிலிருந்து மீளமுடியாத நிலை என்பது பெருந்துயர். மனக்கட்டுக்கோப்புடன் இருக்கும் ஓரிருவர் மீண்டு வரலாம். ஐஸ் போதைப்பொருள் மட்டுமல்ல, எந்த போதைப்பொருளும் ஆபத்தானதே. ஆனால், மிக மலிவாக இது கிடைப்பதால் அதிகம் இளவயதினர் மத்தியில் ஊடுருவியிருக்கிறது. எனவே, பெற்றோர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்.

உலகமயச் சூழலும், பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளும் கிராமங்கள் வரை சென்றடைந்திருக்கின்றன. அடித்தட்டு மக்களும் கூட பணக்காரர்களுக்கு மட்டுமே உரித்தானதாக இருந்த வசதிகளைப் பெற முடிந்திருக்கிறது. கல்விக்கான வாய்ப்பும், புலம்பெயர்தலும், அதிகரித்த வாழ்க்கைத் தரமும் அனைத்துத் தரப்பினரையும் சென்றடைந்திருப்பதை மறுப்பதற்கில்லை. அதே நேரத்தில், சந்தைப் பொருளாதார போட்டிச் சூழலில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முடியாமல் பலர் மனச்சோர்வுக்கும் மன அழுத்தத்துக்கும் ஆளாவது அதிகரித்திருப்பதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது. இந்த இடைவெளியை போதைப்பொருள் நிரப்பிவிடுகிறது. அது பின்னர் தற்கொலை அளவுக்கு கொண்டுவந்து விடுகிறது.

பிள்ளைகள் எதைக் கேட்டாலும் மறுக்காமல் அதை நிறைவேற்றுவதில் பெற்றோர்கள் முனைப்பாக இருக்கின்றனர். அதன் விளைவாக தாங்கள் எதைக் கேட்டாலும் கிடைக்கும் என்கிற மனநிலையில் அவர்கள் வளர்கிறார்கள். அவர்களால் 'இல்லை' என்பதை எதிர்கொள்ள முடிவதில்லை. மிகச் சிறிய வயதிலேயே மன அழுத்தத்துக்கும் பிடிவாதத்துக்கும் அவர்கள் ஆளாவதற்கு அதுதான் முக்கிய காரணம் என்று உளவியல் மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

2014ஆம் ஆண்டின் உலக சுகாதார ஸ்தாபன மனநோய் அறிக்கையின்படி, குறைந்த வருவாய் நாடுகளில் தற்கொலைகளைத் தடுப்பதற்கான எந்தவித முன்னேற்பாடுகளும் இல்லை. நடுத்தர வருவாய் நாடுகளில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உயர் வருவாய் நாடுகளில் தேசிய அளவிலான திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு மன உளைச்சல், தன்னம்பிக்கையின்மை, மன அழுத்தம் ஆகியவற்றை எதிர்கொள்ள ஆலோசனைகள் தரப்படுகின்றன. அதனால், அங்கு தற்கொலைகள் குறைவாக இருப்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

வீட்டுச் சூழலிலிருந்தே பல பிள்ளைகள் போதைப் பாவனைக்கு ஆளாகின்றார்கள். தந்தை சிகரட் புகைப்பவராக இருந்தால், அந்த சிகரட்டை வாங்குவதற்கு பிள்ளையிடம் பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறார். அந்தப் பிள்ளை தந்தையுடைய புகைத்தல் "ஸ்டைலை" பார்த்து நாளடைவில் அதனை திருட்டுத்தனமாக புகைக்க ஆரம்பிக்கின்றது. வீட்டில் வைபவங்களின்போது மது பாவிக்கப்படும்போது பிள்ளைகள் அவற்றின் ஆபத்துகளை பொருட்படுத்தாமல் பயன்படுத்த ஆரம்பிக்கின்றனர்.

வீட்டுச் சூழலில் பயன்படுத்திய போதைப்பொருட்களை பிள்ளைகள் நாளடைவில் சமூக சூழலில் சக தோழர்களுடன் தொடர்ந்தும் பழகிக் கொள்ள முனைகின்றனர். சிலவேளை வீட்டுச் சூழலில் சிகரட் புகைத்தல், மது அருந்துதல் போன்றவை இல்லாவிட்டாலும் சமூக சூழலில் அவை பயன்பாட்டில் இருக்குமாயின் அவர்கள் இலகுவில் போதைக்கு ஆளாகிவிடுவார்கள்.

குடும்பத்தில் எல்லா பிள்ளைகளிடமும் பெற்றோர் சரிசமமான அன்பு, பாசம் காட்டி அரவணைக்க வேண்டும். தாழ்வு மனப்பான்மை வளர விடாமல் காத்துக் கொள்ள வேண்டும். பெற்றோரிடம் உரிய அன்பும் அரவணைப்பும் கிடைக்காத சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் தங்களுக்கு ஏற்படும் மன முறிவை போக்க போதையை பயன்படுத்தி தீர்வுகாண முனைகின்றனர்.

பொது வாழ்வில் ஏற்படும் போட்டி சூழலுக்கு முகம் கொடுக்க முடியாமலும் சவால்களை சந்திக்க முடியாமலும் தோல்வி மனப்பான்மைக்கு ஆளாகும்போது போதையை நாடுகின்றனர். பரீட்சையில் தோல்வி, போட்டி நிகழ்ச்சிகளில் தோல்வி, படிக்க முடியாத பிரச்சினை எனும்போது அவற்றுக்கு தீர்வாக போதையினை பயன்படுத்துகின்றனர். இன்றைய கால மாணவர்களை போதை பாவனையிலிருந்து கட்டுப்படுத்தும் பெரும்பொறுப்பு பெற்றோர்களிடமும் ஆசிரியர்களிடமும் இருக்கிறது. அதில் ஆசிரியர்கள் முதன்மையானவர்கள். நல்ல நண்பனாக, வழிகாட்டியாக செயற்பட்டு இந்த போதை அரக்கனை ஒழிக்க வீறுகொண்டெழுங்கள் ஆசிரிய தெய்வங்களே!

## இன்றைய நாளில்...

- ★ 1792 – வெள்ளை மாளிகைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
- ★ 1892 – புகைப்படங்கள் வாயிலாக முதலாவது வால்வெள்ளியை எட்வர்ட் பேர்னார்ட் கண்டறிந்தார்.
- ★ 1917 – யாழ். மாநகராட்சியானது கிழக்கு, மேற்கு, மத்திய பகுதி என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.
- ★ 1923 – துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில் இருந்து அங்காராவுக்கு மாற்றப்பட்டது.
- ★ 1953 – டட்லி சேனநாயக்கா இலங்கைப் பிரதமர் பதவியைத் துறந்தார்.
- ★ 2014 – இலங்கையில் 1990 முதல் இடைநிறுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாணம் வரையான யாழ்தேவி தொடருந்து சேவை, 24 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது.
- ★ 2016 – மாலைதீவுகள் பொதுநலவாயத்தில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தது.




# தமிழர்கள் சனாதனிகளா?

தமிழர்கள் பிற பகுதிகளில் வாழும் மக்களின் கலாசாரம், பண்பாடு இவற்றில் இருந்து வேறுபட்டவர்கள் என்ற பிரசாரம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உண்மையில் உலகின் பிற பகுதிகளில் வாழும் மக்களிடமிருந்தும் அவர்களின் பண்பாட்டுக் கூறுகளில் இருந்தும் முற்றிலும் மாறுபட்டவர்களாகத் தமிழர்கள் இருந்திருக்கிறார்களா என்ற வினாவுக்கான விடையை நம்முடைய வரலாற்றில் இருந்து தெரிந்து கொள்ள முடியும். தமிழர்களைப் பொறுத்தவரை சங்க இலக்கியம் முதல் சமய இலக்கியங்கள் வரை மிக முக்கிய சான்றாதாரங்களாக இருக்கின்றன.

கல்வெட்டுகளும் செப்பேடுகளும் தமிழர்கள் யார், அவர்களின் வாழ்க்கை முறை என்ன என்பதை விளக்குவதாக இருக்கின்றன. தற்போது தமிழகத்தில் தமிழர்கள் இந்துக்கள் அல்ல என்ற கோஷம் பெரிதாக எழுப்பப்படுகிறது. இதற்குள் அரசியல் பொதிந்திருக்கிறது. அப்படியென்றால், தமிழர்கள் மதமற்றவர்களா என்ற வினா எழுகிறது. உண்மையில் தமிழர்கள் யார்? தமிழர்களுக்கென்று மதம் இல்லையா? அல்லது தமிழர்கள் பின்பற்றிய மதம் எது?

இந்த வினாக்களுக்கு நம்முடைய இலக்கியங்களே மிகத் தெளிவாக விடை சொல்கின்றன. சங்க இலக்கியத்திலும் தெய்வம் இருக்கிறது. தொல்காப்பியம் மரபியலில் கருப்பொருள் பற்றிச் சொல்லுமிடத்து,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை செய்த
யாழின் பகுதியோடு தொகை இ அவ்வகைப்
பிறவும் கருவென மொழிப" என்று தெய்வத்தை முதன்மைப்படுத்துகிறார். இதுவும் தான் வகுத்ததெனக் காட்டாமல் 'மொழிப' என்று தன் காலத்திற்கும் முன்பே தெய்வம் பற்றிய சிந்தனை இருந்ததை உறுதி செய்கிறார்.

முருகக்கடவுள், திருமால், சிவன், இந்திரன், கொற்றவை என்று தெய்வங்களைத் தெளிவாக தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இந்தத் தமிழ் தெய்வங்கள் யார்? தெய்வங்கள் குறித்தான தொன்மக் கதைகள் சங்கத் தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு இடம்பெற்றிருக்கின்றன?

தமிழர்களுக்கென்று சமயங்களும் வழிபடு தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் இருக்கின்றன. இந்து என்ற ஒற்றைச் சொல்லுக்குள் நம்முடைய தமிழ்ச் சமயங்களையும் கொண்டுவந்துவிடும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று ஒருபுறம் வாதிடுகின்றனர்.

சனாதனம் தமிழர்களுக்கானது அல்ல. தமிழர்கள் வேதநெறியைப் பின்பற்றியவர்களும் அல்ல என்பது இவர்களின் வாதம். சனாதனம் வேதங்களை ஏற்றுக் கொள்வது. வேதங்களின் வழியில் வழிபாட்டு முறைகளைக் கொண்டிருப்பது. இவை தமிழரின் வழிபாட்டு முறைகளிலிருந்து மாறுபட்டவை என்றும், சனாதனம் பாரத தேசம் முழுமையும் பின்பற்றப்பட்டு வந்த மெய்யியல் கோட்பாடு அல்லது வாழ்வியல் தத்துவம் என்றும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

தமிழருக்கும் சம்ஸ்கிருதத்தின் நான்கு வேதங்களுக்கும் தொடர்பு இருக்கிறதா? தமிழர்கள் வேதங்களை ஏற்றுக் கொண்டவர்கள் இல்லையா என்ற வினாவுக்கு விடை தேடினால் குழப்பங்களுக்குத் தீர்வு கிடைக்கும். சங்க இலக்கியங்களில் சனாதனம் என்றோ இந்து என்றோ எந்தக் கருத்தியலும் இடம்பெற்றிருக்கவில்லை. ஆனால், புறநானூறு தொடங்கி சங்க இலக்கியத்தின் பல இடங்களில் வேதங்கள், வேதம் பற்றிய கருத்துகள், வேதங்களைக் கற்பித்த அந்தணர்கள், அவர்களது கடமைகள், சமூகத்தில் அவர்களின் உயரிய நிலை என்று பல உண்மைகள் காணக்கிடைக்கின்றன.

'அந்தணன்' என்ற சொல்லை அம் - தண் - அன் எனப் பிரித்துப் பொருள் கொண்டால் முற்றிலும் நல்ல இயல்புகளையும் இரக்கத்தையும் உடையவன் என்று பெப்ரிசிஸ் விளக்கம் தருகிறார். கல்வியாளர்களான இவர்கள் பார்ப்பார் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். தாமப்பல் கண்ணனார் என்ற புலவர் சோழனின் முன்னோர்கள் பார்ப்பனர் மனம் நோகும்படியான செயல்களைச் செய்ய மாட்டார்கள் என்று புறநானூற்றில் பேசுகிறார்.

அந்தணர்கள் மன்னர்களுக்கு நெருக்கமாக இருந்துள்ளனர். 'அறுதொழில் அந்தணர்', 'அறவாழி அந்தணர்' என்று பெருமையாகவே இவர்கள் பேசப்படுகின்றனர். இன்றைய தமிழகத்தில் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களைப் பற்றிய ஒரு சாராரின் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டதாக அந்தணர்கள் மிகுந்த மரியாதையோடு நடத்தப்பட்டுள்ளனர் என்பதும் தெரிகிறது.

புறநானூற்றில் சோழரும், பாண்டியரும் செய்த வேள்விகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வேள்விகள் பெரிய அளவில் மிகுந்த விருப்பத்தோடு மன்னர்களாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. புறநானூற்றின் 397ஆவது பாடல், "அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து எடுத்த தீயோடு விளங்கும் நாடன்" என்று சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பெருமையாக சொல்லப்பட்டு இருக்கிறான்.

புறநானூற்றில் 400ஆவது பாடல், வேதங்களை அறிந்த அந்தணர் நிறைந்த வேள்விச்சாலைகளை உடைய நாட்டின் சொந்தக்காரன் சோழன் நலங்கிள்ளி என்று புகழ்கிறது. பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பல யாகசாலைகளைக் கட்டி யாகங்களைச் செய்தவன் என்பதாலேயே இந்தப் பெயர் பெற்றிருக்கிறான். சோழர்களும் பாண்டியர்களும் தமிழ் வரலாற்றில் தமிழர் பெருமையின் அடிநாதமாக விளங்குபவர்கள். இவர்களை ஒதுக்கிவிட்டு தமிழகத்தையும் தமிழரின் வரலாற்றையும் பண்பாட்டையும் எழுத இயலுமா?

புறநானூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலிலேயே 'மறைநவில் அந்தணர்' என்று அந்தணர்களும் வேதமும் சுட்டப்பட்டு விடுகிறது. 400ஆவது பாடல் வரை பல இடங்களில் 'நால்வேதம்', 'எழுதாக்கிளவி' என்றும், 'மறை', 'மறைபொருள்' என்றும் வேதம் சுட்டப்படுகிறது.

தமிழர்களின் முழுமுதல் தெய்வமாக சிவபெருமான் வணங்கப்பட்டதை கடவுள் வாழ்த்துப் பாடல் சொல்கிறது. தமிழ் மொழியை நமக்குத் தந்து, அதனைக் காப்பதற்கென்று சங்கம் அமைத்து, முதல் சங்கத்தின் தலைவனாக இருந்து சிவபெருமானே தமிழ் வளர்த்ததாக சங்க இலக்கியப் பாடல் சொல்கிறது. சிவபெருமானுக்கும் கொற்றவைக்கும் மகனான முருகன் தந்தையை தொடர்ந்து தமிழ் வளர்த்த தெய்வமாக அறியப்படுகிறான். ஊர்தோறும், ஊரின் நடுவே மன்றம், கோட்டம் என்று கோவில் இருந்ததை சங்க இலக்கியம் உறுதிப்படுத்துகிறது.

இன்றைக்கு தமிழர்களின் சமயம் சைவம் என்றும் வைணவம் என்றும் சொல்கிறார்கள். சைவர்கள் புனித நூலாகக் கருதுவது தேவாரம், திருவாசகம் முதலிய சைவ சமய இலக்கியங்களை. வைணவத்தார் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தையே தங்களின் புனித நூலாகக் கொண்டாடுகிறார்கள்.

அனைத்து சிவாலயங்களிலும் இன்றளவும் அன்றாடம் பாடப்படுவது மாணிக்கவாசகரின் திருவாசகம், மூவர் தேவாரம் ஆகும். அவை 'வேதமோ டாறங்க மாயி னானை', 'வேதநாதன்', 'வேத கீதன்', "ஆரணன்காண்' என்றே இறைவனை வர்ணிக்கின்றன.

பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தரின் வரலாற்றைச் சொல்லுமிடத்து சேக்கிழார்,

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்
துறைவிளங்கப் பூதபரம் பரைபொலியப் புனிதவாய்
மலர்ந்தழுத சீதவள வயற்புகலித் திருஞான
சம்பந்தர் பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு
பரவுவாம்"

என்று கூறுகிறார். இதனை சனாதனத்திலிருந்து நாங்கள் வேறுபட்டவர்கள் என்று வாதிடுவோர் ஏற்கிறார்களா? பெரிய புராணத்தையும் திருவாசகத்தையும் தங்களுடையது அல்ல என்று மறுக்கப் போகிறார்களா?

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று திருமூலரும் இதே சைவநெறியை முன்வைக்கிறார். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று வள்ளலார் சுவாமிகளும்,

"எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல்
வேண்டும்"

என இதே சைவநெறியைத்தான் பாடுகிறார். சைவநெறி என்பது வேதங்களை ஏற்றுக் கொண்டது. வேதவடிவாய் வேதத்தின் விழுப்பொருளாய் விளங்குபவன் இறைவன் என்பதே சமயநெறி.

வைணவ நூல்களிலும் இப்படித்தான், "வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்" என்று சொல்லியிருக்கிறார்கள். வைணவத்தில் திருமால் தெய்வமாக வணங்கப்படுகிறார்.

சனாதன தர்மத்தின் ஸ்ரீமத் பாகவதம் காட்டும் அதே திருமாலே தமிழராலும் வணங்கப்படுகிறார். 108 வைணவத் திருத்தலங்கள் பெருமையாக சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தத் திருத்தலங்களில் வடமொழி வேதத்தோடு நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாசுரங்களும் வழிபாட்டில் இடம்பெறுகின்றன. தமிழகம் தாண்டியும் கோதை நாச்சியாரின் திருப்பாவை பாடப்படுகிறது.

அரசியல் தளத்தில் சமய அடையாளங்கள் பற்றிப் பேசுவோர் சைவம், வைணவம் அல்லது மாலியம் என்று தமிழர் சமயங்களை அடையாளப்படுத்துவோர் சனாதனம் அல்லது இந்து சமயத்திலிருந்து முற்றிலும் மாறானது என்று நிறுவுவதற்கு ஆதாரங்களை முன்வைக்க வேண்டும்.

தேவாரம், திருவாசகம், திவ்ய பிரபந்தம் போன்ற நூல்களை சமய இலக்கியங்கள் என்று ஏற்றுக் கொண்டால் அவற்றில் வேதம் முழுமையாக விரவிக்கிடக்கிறது. சமய இலக்கியங்களை ஒதுக்கிவிட்டால் தமிழரின் சமயத்திற்கான சான்றுகளைக் காட்ட இயலாது. வழிபாட்டு முறைகளை சமயத்திற்கான அடிப்படைகளை நிறுவுவதற்கான சாத்தியம் இல்லாமல் போய்விடும்.

அரசியலோ ஆன்மிகமோ தமிழர் வாழ்வியல் பாரதப் பாரம்பரியத்தோடு ஒத்திசைந்தே இருக்கிறது. விருந்தோம்பல் தொடங்கி விழுமியங்கள் அனைத்திலும் ஒற்றுமைகள் நிறைந்திருக்கின்றன.

எதிர்த்தரப்பில் வலுவான சிந்தனைகளை முன்வைப்போர் இல்லாத காலங்களில் ஆதாரங்களற்ற பேச்சுகள் அரங்கம் ஏறலாம். அடிப்படைகளற்ற சித்தாந்தம் காலத்தால் நிலைபெற முடியாமற் தொலைந்து போகும்.

"அரியும் சிவனும் ஒன்னு - அறியாதவர் வாயில் மண்ணு" என்றொரு சொல்வழக்கு உண்டு. அதைப்போல சனாதனம் ஆகிய இந்து மதமும் சைவ- வைணவ சம்பிரதாயங்களும் ஒன்றே என அறியாதவர் அறிந்துகொள்ள தமிழின் சங்க, சமய இலக்கியங்களைக் கையில் கொடுத்து படிக்கச் சொல்லலாம்.

(நன்றி - தினமணி)

## நக்கல் நமசிவாயம்

நல்லா யோசிச்சுப் பார்.. சென்ட்ரல் பேங்க் மோசடியில தொடர்புபட்டவர் நடிகர் அர்ஜூனோ தெரியேல்ல..!



# அரச மிலேச்சத்தனத்தைத் தோற்கடிக்க முன்வருவோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு



தற்போதைய அரசாங்கம் மக்கள் அதிகாரம், மனித சமூகம், மனித ஒன்றுகூடல்களுக்கு, இளைய தலைமுறையின் ஒன்றிணைவுகளுக்கு பயந்த கோழைத்தனமான அரசாங்கம் எனவும், பாதுகாப்புப் படையினரை புடைசூழ்ந்து, ஆயுதமேந்தி இளைஞர்களை கேவலமான முறையில் ஒடுக்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர்கள் மனிதகுலத்தின் பசி, வேதனைகள் குறித்துக் கூட அற்பமேனும் பொருட்படுத்துவதில்லை. வன்முறை மற்றும் அரச மிலேச்சத்தனம் அவர்களுக்கு அன்றிலிருந்தே பரிச்சயமானது. இந்த மிலேச்சத்தனத்திற்கு எதிராக நாம் எழுந்து நிற்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வியலுவ தேர்தல் தொகுதிக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தி நாடு முழுவதும் சென்று தொகுதி தொகுதியாக ஒழுங்கமைத்து இலட்சக் கணக்கானோருடன் விரைவில் கொழும்புக்கு வந்து ஜனநாயகத்தை வென்றெடுப்போம். முடிந்தால் அடக்குமுறையை தொடருவோம். அதற்கு நீண்ட ஆயுள் இல்லை. இந்த அரச அடக்குமுறையும், வன்முறையும் மக்கள் சக்தியால் தோற்கடிக்கப்படும்.

தற்போதைய அரசாங்கம் புனர்வாழ்வு பணியகம் என்ற புதிய நிறுவகத்தை நிறுவுவதன் மூலம் போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர், யுவதிகளை கைதுசெய்து, புனர்வாழ்வளிக்க முயற்சிக்கிறது. ஆனால், உண்மையில் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்கள், விவசாயிகள், மீனவர்கள், இளைஞர்கள், குழந்தைகள் என சகலரையும் அழித்த ராஜபக்ஷ தலைமுறையினர்கள்தான். ஆனால், ராஜபக்ஷ குடும்பத்தின் அனுசரணையுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம், தற்போது மக்களின் இன்னல்களுக்காக குரல்கொடுக்கும் இளைஞர், யுவதிகளை புனர்வாழ்வு என்ற போர்வையில் சித்திரவதை செய்து சிறையில் அடைக்க முயற்சிக்கின்றது. இதனைத் தோற்கடிக்க ஐக்கிய மக்கள் சக்தி முன்நிற்கும் - என்றார்.





கொழும்பு, கிரேண்பாஸ் இரண்டாம் நவகம்புர அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளிகாம்பாள் ஆலயத்தின் நவராத்திரி வாணி விழா நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவளர் அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் ஆசிரியர்களையும் முக்கியஸ்தர்களையும் படங்களில் காணலாம்.

# கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி 73ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட்டம்!







**(மன்னார் நகர் நிருபர்)**

வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வைக் கோரும் பயணத்தில் 73ஆவது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று (12) மன்னார் நகரப் பகுதியில் மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கான இணையத்தின் ஒழுங்கமைப்பில் அதன் மாவட்ட இணைப்பாளர் சகாயம் திலீபன் தலைமையில் இடம்பெற்றது.

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல் எனும் தொனிப்பொருளில் வடக்கு, கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெறவுள்ள செயல் திட்டத்தின் 73ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட்டம் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மேற்படி மன்னாரில் இடம்பெற்றது.

குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கத்துவ அமைப்பின் இணைப்பாளர் பிரசாந்த் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஊழியர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இளைஞர்கள், பொதுமக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

குறித்த போராட்டம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டவர்களில் காணி அபகரிப்பைத் தடுக்குமாறு கோரிக்கை

**(ஏ.ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோரின் காணிகளைத் தோட்ட நிறுவனங்கள் மீண்டும் அபகரித்து வருவதையிட்டு பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான அ.அரவிந்தகுமார், பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்கு விரிவான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பெருந்தோட்டங்களில் வசிக்கும் தொழிலற்றவர்கள் மற்றும் தொழிலாளர்கள் தமது வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் விசேட அனுசரணையுடன், பல தசாப்தங்களாக பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு பயிர்ச்செய்கைகளில் பல தசாப்தங்களாக ஈடுபட்டு வருபவர்களின் காணிகளை அபகரிக்கும் செயல்திட்டத்தை உடனடியாக நிறுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை கருத்திற் கொண்டு செயற்படுமாறு பெருந்தோட்டத்துறை அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்தோடு இவர்களின் பங்களிப்பு தேசிய ரீதியில் பல நன்மைகளை ஏற்படுகிறது.

மலையக மக்களின் உரிமைகளை பாதுகாக்கவும், தோட்ட நிறுவனங்களின் அடாவடி செயற்பாட்டை தடுத்துநிறுத்துமாறும் கோரியுள்ளார்.

## 12.10.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 111 78 2 | 122 5481 |
| கனேடியன் டொலர் | 147 4036 | 16 0556 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 0778 | 41 0665 |
| யூரோ | 235 1646 | 25 8234 |
| ஜப்பான் யென் | 1 3317 | 1 4342 |
| சிங்கப்பூர் டொலர் | 137 43 | 147 5038 |
| ஸ்ரேலிங் பவுன் | 280 721 | 3 6 0745 |
| சுவிஸ் பிரான்ங் | 245 6185 | 263 0740 |
| ஐ.அ.டொலர் | 248 5507 | 26 2834 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 850 5318 |
| குவைட் | குவைட் தினார் | 0,058 6 08 |
| ஓமான் | ஓமான் றியால் | 831 45 6 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 2047 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4305 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 6883 |

# இரு நூல்களின் வெளியீட்டு விழா நிகழ்வு




மக்கொன ஸுல்பிகா எம்.ஸாலிஹ் ஸினான் எழுதிய ‘சிந்திக்க மறந்த உள்ளங்கள்’ மற்றும் எழுத்தாளர் திக்குவெல்லை ஸஃப்வானின் ‘வாப்பாவுக்கு ஒரு சால்வை’ நூல் ஆகிய இரண்டு சிறுகதை நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (16ஆம் திகதி) பிற்பகல் 02.30 மணிக்கு பேருவளை, மருதானையிலுள்ள அல்-பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபர் அல்ஹாஜ் அப்துல் அஃலாவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், இரத்தினக்கல் வியாபாரிகளான அல்ஹாஜ் எம்.ரீ.எம்.ஹாரிஸ் மற்றும் அல்ஹாஜ் அஸ்ஹர் ஸவாஹிர் ஆகியோர் நூல்களின் முதல் பிரதிகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

பிரதம அதிதியாக முன்னாள் தொலைத் தொடர்பாளர் அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், கௌரவ அதிதிகளாக மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாஜ் அஹ்ஸன் மரிக்கார் மற்றும் அஷ்ஷெய்க் மௌலவி ஸகி அஹ்மட் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

அத்துடன், விசேட அதிதிகளாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம்.அஸ்லம், பேருவளை நகரபிதா அல்ஹாஜ் மஸாஹிம் மொஹமட், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் இப்திகார் ஜெமீல், சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.ஏ.எம்.ஹனபி, அல்-பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மஸ்னவியா ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

நிகழ்வின் சிறப்புப் பேச்சாளர்களாக தொழிலதிபர் அல்ஹாஜ் ரம்ஸி அமானுல்லாஹ் மற்றும் கவிஞர், கலாபூஷணம் என். நஜ்முல் ஹுசைன் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளார்.

‘சிந்திக்க மறந்த உள்ளங்கள்’ சிறுகதை நூலுக்கான ஆய்வுரையை திக்குவல்லை ஸும்ரியும், வாப்பாவுக்கு ஒரு சால்வை நூலுக்கான ஆய்வுரையை பன்னூலாசிரியர், கலாபூஷணம் திக்குவல்லை கமாலும் நிகழ்த்துவார்கள். அதனைத் தொடர்ந்து பன்னூலாசிரியர் கவிதாயினி வெலிகம ரிம்ஸா முஹம்மத் கருத்துரை வழங்கவுள்ளார். கலைவாதி கலீல், கவிஞர் அலி அக்பர் ஆகியோர்கள் கவிதைப் பொழிவுகளை நிகழ்த்துவார்கள். நூலாசிரியர்களின் ஏற்புரை மற்றும் நன்றியுரைகளும் தொடர்ந்து இடம்பெறும்.

அத்துடன், இலங்கை வானொலி முஸ்லிம் சேவை புகழ் கலைஞர்களான மஹ்தி ஹஸன் இப்றாஹிம், ஜெய்ரஹீம் சஹீத் குழுவினர் வழங்கும் சஞ்சாரம் நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மேலும் பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சிகளை திக்குவல்லை ஸும்ரி சிறப்புறத் தொகுத்து வழங்குவார். மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அனைவரையும் அன்போடு அழைக்கின்றனர்.



பெந்தோட்டை, பாஸல்தொட்ட, அக்கர என்ற சிறிய கிராமத்தில் இன நல்லிணக்கத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் மீலாத் நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. இவ்வைபவத்தில் பெந்தோட்டை பிரதேச சபை உறுப்பினர் தம்மிக்க நாணயக்கார, கிராமசேவை உத்தியோகத்தர் வசந்த, பெந்தோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள், பிரதேச முக்கியஸ்தர்கள், மௌலவிகள், சீனன்கோட்டையைச் சேர்ந்த பாஸி ஹாஜியார் மற்றும் பிரதேச முஸ்லிம்கள் என பலரும் கலந்துகொண்டனர். (படங்கள் - முக்தார் நிருபர்)

திகதி 11.10.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4905
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,249,240.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 1 1 5 2 3 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,025,794.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3147
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,627,560.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 01 17 67 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,705,897.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1360
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,830,880.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 6 7 9 1 9 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,223,706.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 935
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,231,420.00
வெற்றி இலக்கினம் O வெற்றி இலக்கங்கள் 07 30 38 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 129,489,374.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 214
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,596,880.00
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 16 27 30 40
விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,569,797.60

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1253
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,293,560.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 275,422,254.00
A 23 08 17 57 76
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011 4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk

# தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச நிறுவனத்துடன் யாழ். பல்கலை சட்டத்துறை இணைந்து உடன்படிக்கையில் கைச்சாத்து



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத் துறையும், தேர்தல் முறைமைகளுக்கான சர்வ தேச நிறுவனத்தின் இலங்கைக் கிளையும் இணைந்து மேற்கொள்ளவுள்ள 'ஜனநாயகம் - கோட்பாட்டிலிருந்து நடைமுறை வரை' என்னும் தலைப்பிலான சான்றிதழ் கற்கைநெறி மற்றும் 'அவள் தலைமையில்' என்னும் தலைப்பிலான வலுவூட்டல் செயற்றிட்டம் ஆகியவற்றுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் (11) காலை யாழ்ப் பாணப் பல்கலைக்கழக சபை அறையில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சிவக் கொழுந்து சிறீசற்குணராஜாவும், தேர்தல் முறைமை களுக்கான சர்வதேச நிறுவனத்தின் சார்பில் அதன் இலங்கை நாட்டுக்கான பிரதிப் பணிப்பாளர் லசந்தி டஸ்கோனும் இவ்விரு புரிந்துணர்வு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டனர்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும், கலைப்பீடத்தின் பதில் பீடாதிபதியுமான பேராசிரியர் சி.ரகுமார், சட்டத்துறைத் தலைவர் திருமதி எஸ்.துஷானி மற்றும் விரிவுரையாளர்கள், தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச நிறுவனப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

முதலாவது உடன்படிக்கையின் பிரகாரம் தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச நிறுவனத்தின் அனுசரணையுடன் 'ஜனநாயகம் - கோட்பாட்டிலிருந்து நடைமுறை' வரை என்னும் தலைப்பிலான சான்றிதழ் கற்கைநெறியொன்றை விருப்ப வெளிப்படுத்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட முப்பது சட்டத்துறை மாணவர்களுக்கு வழங்குவதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறியின் மூலமாக ஜனநாயக மேம்பாட்டில் குடிமக்கள் மற்றும் சிவில் சமூகத்தின் பங்களிப்பு முதலான சமூகம்சார் கோட்பாடுகள் தொடர்பான அறிமுகம் வழங்கப்பட எதிர்பார்க்கப்படுவதோடு, மாணவர்களின் மென்திறன்கள், பொதுத் தொடர்பாடல் தகைமைகள் முதலானவற்றை அபிவிருத்தி செய்தலும் மற்றுமொரு நோக்கமாகக் காணப்படுகின்றது.

இரண்டாவது உடன்படிக்கையானது 'அவள் தலைமையில்' என்னும் தலைப்பிலான வலுவூட்டல் செயற்றிட்டம் ஒன்றை விருப்ப வெளிப்படுத்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட முப்பது சட்டத்துறை மாணவிகளுக்கு வழங்கும் தன்மையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வலுவூட்டல் செயற்றிட்டத்தின் நோக்கங்களாக மாணவிகளை அரசியல் மற்றும் சமூகவெளிகளில் தலைமைத்துவத்தை ஏற்பவர்களாக வடிவமைத் தலும் தேவையான திறன் விருத்திக்கு வழிகாட்டு தலும் காணப்படுகின்றன.

ஜனநாயகம் - கோட்பாட்டிலிருந்து நடைமுறை வரை சான்றிதழ் கற்கைநெறியையும், அவள் தலைமையில் வலுவூட்டல் நிகழ்வினையும் தொடர்ச்சியான தன்மையில் நிறைவேற்றிச் செல்லக்கூடிய உறுதிப்பாட்டுடன் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பிரம்படியில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் 35ஆவது ஆண்டு நினைவு தினம்





(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்படி பகுதியில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் 35ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக ஆடியபாதம் வீதி, பிரம்படியில் அமைந்துள்ள நினைவுத்தூபி முன்பாக நேற்று (12) நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

படுகொலையானவர்களின் உறவுகள் நினைவேந்தலில் கலந்துகொண்டு உயிரிழந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் இந்திய இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட "ஒப்பரேஷன் பவன்" நடவடிக்கை மூலம் அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 50இற்கும் மேற்பட்டோரை இந்திய இராணுவத்தினர் படுகொலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுகள் திறந்துவைப்பு



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் கடந்த திங்கட்கிழமை (10) காலை திறந்துவைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் சி.குமரவேல் தலைமை யில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன கலந்துகொண்டு கட்டடத்தை திறந்துவைத்தார்.

மேலும், நிகழ்வில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகப் பிரதிநிதிகள், கொழும்பு தெற்கு ரோட்டரிக் கழகப்பிரதிநிதிகள், வைத்தியசாலையின் முன்னாள் அத்தியட்சகர் டயாழினி, வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித் திருந்தனர்.

விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அலகானது இரண்டாவது சுகாதாரத்துறை மேம்பாட்டுத்திட்டம், மாகாண குறித்தொதுக்கப் பட்ட அபிவிருத்தி நிதி மற்றும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு அமைப்பு வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் ஆகிய ஒதுக்கீடுகள் மூலம் அமைக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, சத்திர சிகிச்சைக் கூடத்திற்கான மருத்துவ உபகரணங்களை தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் மற்றும் ரோட்டரிக் கழகம் ஆகியன நன்கொடையாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வல்லையில் மூன்று பெண்களிடம் பத்து பவுண் நகை வழிப்பறி

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வல்லை பகுதியில் மூன்று பெண்களிடம் சுமார் 10 பவுண் தங்க நகைகள் வழிப்பறிக் கொள்ளை இடம்பெற்றுள்ளது. வல்லைவெளி பகுதியில் நேற்று முன்தினம் (11) இரவு இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வல்லைவெளி பகுதி ஊடாக மோட்டார் சைக் கிளில் பயணித்த இரு பெண்களை வழிமறித்த வழிப்பறிக் கொள்ளையர்கள் கத்தியை அவர்களின் கழுத்தில் வைத்து, அவர்கள் அணிந்திருந்த ஒன்றரை பவுண் தங்கச் சங்கிலி உட்பட சுமார் 08 பவுண் நகைகளை பறித்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் இடம்பெற்று ஒருசில மணிநேரங்களில், வல்லைவெளி பகுதி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணொருவரை பின்னால் வந்து மோதி அப்பெண்ணை விபத்துக்குள்ளாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த சுமார் ஒன்றரை பவுண் தங்கச் சங்கிலி மற்றும் பெறுமதியான கையடக்கத் தொலைபேசி என்பவற்றை கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

குறித்த பகுதி இரவு வேளைகளில் இருள் சூழ்ந்து காணப்படுவதால், அப்பகுதிகளில் வழிப்பறிக் கொள்ளையர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் அப்பகுதியினூடாக பயணிப்பது ஆபத்து நிறைந்ததாக தற்போது மாறி வருகிறது. எனவே, சம்பந்தப்பட்ட தரப்புகள் அப்பகுதியில் மின்விளக்குகளை பொருத்துதல் உள்ளிட்ட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வல்வெட்டித்துறையில் பல வீடுகளில் தொடர் கொள்ளை; இருவர் கைது

(யாழ். நிருபர்)

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் தொடர்ந்து பல வீடுகளில் திருட்டில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் முதன்மை சந்தேக நபர் ஒருவரும் அவருக்கு உதவியவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கம்பர்மலையைச் சேர்ந்த 25 வயதுடைய முதன்மை சந்தேக நபர் ஒருவரும் அவருக்கு உதவிய உடுப்பிட்டியைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவருமே கைதுசெய்யப்பட்டவர்கள் எனவும், அவர்களிடமிருந்து 11 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் உருக்கப்பட்ட தங்கம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

வல்வெட்டித்துறை பகுதியில் தொடர்ச்சியாக பூட்டியிருக்கும் வீடுகளைப் பகல்வேளைகளில் உடைத்து நகைகள் திருடப்பட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனடிப்படையில் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவந்த நிலையில், திருடப்பட்ட நகைகள் பருத்தித்துறை நகரில் உள்ள நகைக்கடை ஒன்றில் உருக்கிய நிலையில் கைப்பற்றப்பட்டன. முதன்மை சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் திருட்டு நகைகளை வங்கியில் அடகு வைக்க உடந்தையாக இருந்த மற்றொருவரும் கைதுசெய்யப்பட்டனர்.




முப்பது வருடங்களாக தம்பதிகளாக வாழ்ந்த கணவனுக்கு தனது மனைவியின் பெயர் தெரியாமல் போன சம்பவம் ஒன்று கண்டி வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

கண்டி பிரதேசத்தில் வயோதிபப் பெண் ஒருவர் திடீரென மரணித்ததன் காரணமாக மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோனைக் காக சடலம் கண்டி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இவ்வாறு மரணமடைந்தவரின் மகனிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. அதன்போது வாக்குமூலம் அளிப்பவரின் மனைவியின் பெயரை மரண விசாரணை அதிகாரி வினவியுள்ளார்.

தான் திருமணம் முடித்து 30 வருடங்களாக தம்பதிகளாக வாழ்ந்த போதும் மனைவியின் பெயர் தெரியாமல் கணவன் தடுமாறியுள்ளார்.

அதன்பிறகு எழுந்து வைத்தியசாலைக்கு வெளியே அமர்ந்திருந்த தனது மனைவி யிடமே பெயரைக் கேட்டு மரண விசாரணை அதிகாரிக்குத் தெரியப்படுத்தியள்ளார்.

அதனைக் கேள்விப்பட்ட ஊர்ப் பொது மக்கள் சிலர் தமது ஊருக்கு வந்த பின் இச்சம்பவத்தை சுவைபடத் தெரிவித்துள்ளனர்.

# 22 ஆம் திருத்தம் குறித்து மக்களை தெளிவுபடுத்துகிறோம்

## நல்ல திட்டங்களுக்கு ஒத்துழைப்பதாகக் கூறுகிறார் கரு ஜயசூரிய



நாட்டு நலனுக்கான நல்ல திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். அந்த வகையில் தற்போதைய சூழ்நிலையில் புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படும்வரை தற்காலிகமாக 22 ஆம் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என நாட்டு மக்ளை தெளிவுபடுத்தி வருகிறோம் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

கண்டி, மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களுக்கு சென்று மேற்படி விடயங்களை தெளிவுபடுத்திய பின் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் தேசிய பிரச்சினை பற்றி சமயத் தலைவர்களை தெளிவுபடுத்தி வருகிறோம். அந்த வரிசையில் கண்டிக்கும் விஜயம் மேற்கொண்டு மகாநாயக்க தேரர்களை தெளிவுபடுத்தினோம்.

அரசியலமைப்பின் 19ஆம் திருத்தம் போன்ற ஒன்று கொண்டுவரப்படுவதாகத் தெரிவித்த போதும் அவ்வாறு நடக்கவில்லை. அதற்கு இணையாகக் கொண்டு வரப்படவுள்ள 22 ஆம் திருத்தம் பூரணமான ஒன்று என்று கூற முடியாத போதும் புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படும்வரை தற்காலிகமாக ஒரு வருடம் போன்ற சிறிது காலத்துக்காவது அது அமுலில் இருக்க வேண்டும். நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் அதிகாரம் நாட்டு மக்கள் வசம் உண்டு. அதற்கு சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்பட வேண்டும். அதுதான்பொதுத் தேர்தலாகும்.

நாடாளுமன்றத்திற்கான அதிகாரத்தை அதிகரிப்பதே இன்றைய தீர்வாகும் என அதிகமானவர்கள் கருதுகின்றனர். அதற்கு பொதுமக்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானப்படி கருத்து வெளியிடும் சுதந்திரம் மக்களுக்கு உண்டு. அதனைத் தடுப்பது ஜனநாயக விரோத செயலாகும். நாடு என்ற வகையில் நாம் தனித்து இயங்க முடியாது. சர்வதேசத்தை அனுசரித்துச் செல்ல வேண்டியுள்ளது என்றார்.

# பேராதனை பல்கலையில் சித்திரவதை; கலைப்பீட விரிவுரையாளர்கள் கண்டனம்

(கண்டி செய்தியாளர்)



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அண்மை யில் இடம்பெற்றதாகக் கூறப்படும் புதிய மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைச் சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட விரிவுரையாளர்கள் சங்கம் நீண்ட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நடந்தவைகளைப் பார்க்கும் போது இச்சம்பவம் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சம்பவம் அல்ல என்பது புலனாகிறது.

பல்கலைக்கழக அமைப்பில் பல தசாப்தங்களாக பழைய மாணவர்களால் புதிய மாணவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் சித்திரவதைகள் இடம்பெற்று வருவதாகவும் இது தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறை, அநீதி, ஜனநாயக விரோத, மனிதாபிமானமற்ற செயல்களாக இவை கருதப்படலாம் என பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரையானர் சங்கம் தெரிவிக்கிறது.

சித்திரவதை மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை தாம் நிராகரிக்கும் அதேவேளை, அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் பீடாதிபதியை நோக்கி மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல் விடுத்ததை கண்டிப்பதாகவும், பல்கலைக்கழக சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் தேவைகள், அதன் உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களை பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் தமது சங்கம் இருப்பதாகவும் கலைப்பீட விரிவுரையாளர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# கொட்டகலை பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்டம் நிறைவேறியது



(க.கிஷாந்தன்)

கொட்டகலை பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று முன்தினம் (11) ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அடுத்த ஆண்டில் மந்த போசணையைக் குறைக்கும் வகையில் சத்துணவுத் திட்டத்துக்காக 25 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாந்த் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அடுத்த ஆண்டுக்கான சபையின் வருமானம் 15 கோடியே 46 இலட்சத்து 5 ஆயிரத்து 20 ரூபாவும், செலவினம் 15 கோடியே 46 இலட்சத்து 3 ஆயிரத்து 865 ரூபாவும் ஆகும்.

மந்த போசணைக்குள்ளான சிறுவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்காக 25 இலட்ச ரூபாவும், சக்கர நாற்காலி அல்லது ஊன்றுகோல் பெற்றுக் கொடுப்பதற்காக 75 ஆயிரம் ரூபாவும், லொக்ஹில் – கிரிஸ்லர்ஸ்பாம் ஆற்றை அகலப்படுத்த 38 இலட்ச ரூபாவும், கொட்டகலை மைதானத்தில் விளையாட்டரங்கம் அமைக்க 50 இலட்ச ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், சுகாதார முகாமுக்கு 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதோடு, 5 பஸ் தரிப்பு நிலையங்கள், புதிய நூலகங்கள், வாராந்த சந்தை, நடமாடும் மலசல கூடங்கள், சுயதொழில் வாய்ப்புக்கான காணிகளைப் பெற்றுக் கொடுத்தல், உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வசதிக்காக கொமர்ஷல் பிரதேசத்தில் சிறுவர் பூங்கா மற்றும் வர்த்தக நிலையங்களை அமைத்து சபைக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளுதல், கடந்த 6 வருடங்களாக தேங்கிக் கிடக்கும் கொட்டகலை பிரதேச சபையின் கட்டுமானப் பணிகளை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின்கீழ் 50 மில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றுக் கொள்ளுதல், குப்பைகளை மீள் சுழற்சி செய்தல், சேதனப் பசளை திட்டத்தை அதிகரித்தல், உழவு இயந்திரம் பெற்றுக் கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விளையாட்டரங்கம் அமைக்க ஜனவரி முதலாம் திகதி அடிக்கல் நாட்டவும், பொங்கல் பண்டிகைக்குப் பிறகு சத்துணவுத் திட்டத்தை ஆரம்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.



# ஹட்டன் - டிக்கோயா நகரசபைக்கு ஏலத்தில் ரூ.46 இலட்சம் வருமானம்

(க.கிஷாந்தன்)

ஹட்டன் நகரில், ஹட்டன் - டிக்கோயா நகரசபை யின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இடங் களில் தற்காலிக கடைகள் அமைப்பதற்காக மேற் கொள்ளப்பட்ட ஏலத்தின் மூலம் நகர சபைக்கு 46 இலட்சம் ரூபா வரை வருமானம் கிட்டியுள்ளதாக ஹட்டன் - டிக்கோயா நகரசபையின் தவிசாளர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, ஹட்டன் நட்சத்திர சதுக்கம், பஸ் தரிப்பிடம் மற்றும் பொதுச்சந்தை பகுதிகளில் உள்ள 155 இடங்களில் தற்காலிக கடைகளை அமைப்பதற்கான ஏலம் நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்றது.

இதன்போதே வியாபாரிகளால் மேற்படி இடங்கள், ஏலம் மூலம் வாங்கப்பட்டுள்ளன.

அங்கு தற்காலிகமாக அமைக்கப்படும் கடைகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான பொறுப்பும் ஏலத்தின் மூலமே வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்பந்தம் 4 இலட்சம் ரூபாவாகும்.

அத்துடன், தீபாவளிப் பண்டிகைக்கான வியாபாரத்தை முன்னெடுப்பதற்கு ஹட்டன் - டிக்கோயா நகரசபையின் மண்டபமும் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்துக்கு எடுக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் - டிக்கோயா நகரசபையால் வழங்கப்படும் ஆலோசனைகளைப் பின்பற்றியே வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், இதனை கண்காணிப்பதற்கு அதிகாரிகள் மட்டத்திலான குழுவொன்று பணியில் ஈடுபடுத்தப்படும் எனவும் தவிசாளர் தெரிவித்தார்.

அதேவேளை, வியாபாரிகள் மற்றும் நகருக்கு வரும் நுகர்வோரின் பாதுகாப்பு கருதி பொலிஸாரினால் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது. பண்டிகை முடியும்வரை தற்காலிக காவல் அரணொன்றும் அமைக்கப்படவுள்ளது.

# பண மோசடி செய்தவர் கைது

(கண்டி செய்தியாளர்)

மலேஷியாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி இரண்டரை இலட்ச ரூபா வீதம் இருவரிடம் மோசடிசெய்த ஒருவரை கண்டி, பூஜாப்பிட்டிய பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மலேஷியாவில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி இருவரிடம் பணம் பெற்று சிங்கப்பூர் விசாவை பெற்றுக்கொடுத்த சம்பவம் தொடர்பாக பூஜாப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து சந்தேக நபர் ஒருவர் அக்குறணை கிங்ஸ்கோட் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு நாட்டின் பல பாகங்களிலு முள்ளவர்களை மலேஷியாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று கைவிட்டுள்ளதால் அவர்கள் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மத்திய வங்கிக்கு புதிய துணை ஆளுநர் நியமனம்

நிதி அமைச்சரின் ஒப்புதலுடன் நாணயச் சபையானது, உதவி ஆளுநரும் நாணயச் சபைக்கான செயலாளருமான திருமதி கே.எம்.ஏ.என்.டவுளுகலவை இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர் பதவிக்கு பதவியுயர்த்தியுள்ளது.

கடந்த 07ஆம் திகதிமுதல் இந்தப் பதவி உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

டவுளுகல, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு, நிதி, பன்னாட்டுத் தொழிற்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவம், பிரதேச அபிவிருத்தி, மனிதவள முகாமைத்துவம் மற்றும் பயிற்சி அத்துடன், அபிவிருத்தி ஆகிய துறைகளில் வேறுபட்ட பதவிகளில் இலங்கை மத்திய வங்கியில் 31 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியுள்ளார்.

இவர் முதன்மைக் கணக்காளராகவும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு பணிப்பாளராகவும் பணியாற்றி யுள்ளதுடன், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையில் சட்ட கட்டமைப்பையும் ஆளுகையையும் வலுப்படுத்துவதற்கு பங்களித்துள்ளார்.

டவுளுகல துணை ஆளுநராக நியமிக்கப்பட முன்னர் உதவி ஆளுநராக பதவி வகித்ததுடன், பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம், வங்கித்தொழில் கற்கை களுக்கான ஆய்வுநிலையம் என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்தார். அத்துடன், நாணயச் சபைக்கான செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர், சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு, நாணயச் சபை ஆலோசனை கணக்காய்வுக் குழு மற்றும் ஒழுக்கநெறிக் குழு ஆகியவற்றுக்கான செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும், நிதி திட்டமிடல் அமைச்சுக்கு இவர் விடுவிக்கப்பட்டு அரசாங்கத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றினார். இவர் அமைச்சில் பதவிவகித்தபோது திறைசேரியைப் பிரதிநிதித்துவப் படுத்தி இலங்கை வங்கியின் பதவிவழிப் பணிப்பாளராகவும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உறுப்பினரொருவராகவும் பணியாற்றினார். தற்போது டவுளுகல இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் தலைவராகப் பணியாற்றுகின்றார்.



டவுளுகல, ஐக்கிய இராச்சியத்தின் எசெக்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் மற்றும் வியாபாரப் பொருளியலில் முதுமாணி விஞ்ஞானப் பட்டத்தினையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாக முதுமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிறுவகத்தின் சக உறுப்பினருமாவார்.





கண்டி, தெல்தெனிய பஸ் நிலையக் கட்டிடம் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாவும், அங்கு முறையற்ற உபயோகம் நடைபெறுவதாகவும் சட்டவிரோதமாக சிலர் அதனைப் பயன்படுத்தி வருவதாகவும் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே அங்கு நேரடியாகச் சென்று அதனைப் பார்வையிட்டார்.

(கண்டி செய்தியாளர்)

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு





(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - முந்தல் கீரியங்களி பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மதுரங்குளி நல்லாந்தளுவ பகுதியைச் சேர்ந்த பரீத் முஹம்மது பஸ்ரின் (வயது 25) எனும் இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு புதிதாக திருமணமான குறித்த இளைஞரும், அவரது மனைவியும் கடந்த 20ஆம் திகதி முச்சக்கர வண்டியில் கொழும்பிலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று மீண்டும் தமது வீட்டுக்கு வருகை தந்தபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குறித்த முச்சக்கரவண்டியை செலுத்திச் சென்ற இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்ததுடன், முச்சக்கரவண்டியின் பின்பக்கம் இருந்த அவரது மனைவியும், மனைவியின் சகோதரரும் சிறிய காயங்களுக்குள்ளானதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குறித்த இளம் குடும்பஸ்தரை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளதாகவும் கூறப் படுகிறது.

இவ்வாறு தொடர்ந்தும் மூன்று வாரங்கள் சிலாபம் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த குறித்த இளம் குடும்பஸ்தர் நேற்று முன்தினம் (11) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் ஜனாஸா பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இங்கிரிய விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் வாணி விழா






























இங்கிரிய, றைகம், கீழ்ப்பிரிவு, விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் நவராத்திரி, வாணி விழா அண்மையில் நடைபெற்றது.

அதிபர் மெ.ஆனந்தகுமாரின் தலைமை ஒருங்கமைப்பில் மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்ட இப்பெருவிழாவின் பூஜைகளை றைகம், கீழ்ப்பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கணேச பரமசிவன் குருக்கள் நடத்தினார்.

நிகழ்வின் தொடக்கத்தில் வித்தியாரம்ப நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து இவ்விழாவின் கலை நிகழ்வுகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்வில் ஹொரணை கல்வி வலய பாடசாலை அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அரசியல் பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மற்றும் உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இயல், இசை, நாடகம் என மூவகைக் கலைகளாலும் வெகு விமரிசையாக முன்னெடுக்கப்பட்ட இவ்வாணி விழாவை இந்து மன்ற பொறுப்பாசிரியர்களும் ஏனைய ஆசிரியர்களும் இணைந்து முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்களும் தகவலும் : மணி ஸ்ரீகாந்தன்)

# அம்பாறை - கல்முனை நெடுஞ்சாலை ஓரங்களில் தினசரி குவியும் குப்பைகள்



(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை - கல்முனை பிரதான வீதியில் காரைதீவு சந்தியிலிருந்து மாவடிப்பள்ளிக்கு இடைப்பட்ட நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையின் பெரிய நீர்க்குழாய் செல்லும் பிரதேசங்களில் தினசரி குப்பைகள் சேரும் அளவு அதிகரித்து வருகிறது.

இரவு வேளையில் வாகனங்களில் பயணிப்போர் வீதியின் இருமருங்கிலும் குப்பைகளை வீசிவிட்டு செல்வதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

காரைதீவு பிரதேச சபை பிரிவிற்குட்பட்ட இப்பிரதேசத்தில் கட்டட இடிபாடுகள், விலங்குகளின் கழிவுகள், வீட்டுக்கழிவுகள் என்பன காணப்படுவதாக பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# இலங்கையில் முதலாவது சூரிய மின்னுற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் திறந்துவைப்பு








(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட நாவற்காடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சூரிய சக்தி மின்னுற்பத்தி நிலையம் கடந்த 11 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிராமிய வீதி மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர பிரதம அதிதியாக கலந்துகொண்டு, சூரிய சக்தி மின்நிலையத்தினை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்துள்ளார்.

சுமார் 2.5 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குறித்த சூரிய சக்தி மின் நிலையத்தின் ஊடாக பிறப்பிக்கப்படும் மின்சாரமானது நேரடியாக மின்சார சபைக்கு வழங்கப்பட்டு மக்கள் பாவனைக்கான பொது மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

குறித்த சூரிய சக்தி மின்நிலையத்தின் ஊடாக சுமார் 200 பேர் வரை நேரடியாக தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதுடன், 10 மெகாவாட் மின்சாரம் பிறப்பிக்கப்படுவதுடன் இதனை பிறப்பிப்பதற்காக 18,676 சூரிய மின்கலங்கள், 47 மாற்றிகள் மற்றும் 04 டிரான்ஸ்போமர்ஸ் என்பன இயங்கிவருகின்றன.

அத்தோடு 40 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குறித்த சூரிய சக்தி மின் நிலையத்தில், மேலதிகமாக உள்ள நிலப்பரப்பில் நாட்டின் உணவுப் பாதுகாப்பு நிலையை கருத்திற்கொண்டும் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தினையும் உயர்த்தும் நோக்கில் பயிர்ச்செய்கை மேற்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர்கள், மின்சார சபை உயரதிகாரிகள், இராஜாங்க அமைச்சின் இணைப்பு செயலாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட மேலும் பல துறைசார் அதிகாரிகள் அதிதிகளாக கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர். மேலும், இந்நிகழ்வின்போது பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளினால் பயன்தரும் மாமரக் கன்றுகள் நடப்பட்டதுடன், அருகிலுள்ள பாடசாலைக்கு பெறுமதிவாய்ந்த திறன் பலகை (Smart Board) ஒன்றும் வழங்கிவைக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

# கந்தளாய் சீனித் தொழிற்சாலையை அண்டிய பகுதியில் நான்கு மாதங்களுக்கு மாடுகளைப் பராமரிக்க அனுமதி



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் சீனித் தொழிற்சாலையை அண்டிய பகுதியில் நான்கு மாதங்களுக்கு மாடுகளை பராமரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பிற்கும் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு.சுதாகரனுக்குமிடையில் மாடுகளுக்கான மேய்ச்சல் தரை விடயம் தொடர்பாக கலந்துரையாலொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பு கடந்த செவ்வாய்கிழமை (11) இடம்பெற்றுள்ளது.

தற்பொழுது திருகோணமலை மாவட்டத்தில் வேளாண்மை செய்கை ஆரம்பமாகியுள்ளதால், மேய்ச்சல் தரையின்மையினால் கிண்ணியா பிரதேசத்தில் இருக்கும் ஆயிரக்கணக்கான கால்நடைகளை பராமரிப்பதில் பண்ணையாளர்கள் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

தற்போது கந்தளாய் சீனித் தொழிற்சாலையை அண்டிய பகுதியில் கால்நடைகளை கொண்டுசெல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனையடுத்து தற்காலிகமாக 4 மாதங்களுக்கு கந்தளாய் சீனித் தொழிற்சாலை வளாகத்தில் கிண்ணியா பிரதேச கால்நடைகளை வைத்துப் பராமரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

# வடிகான்கள் துப்புரவு செய்யும் பணி இரவு - பகலாக முன்னெடுப்பு

## கல்முனை மாநகர சபை நடவடிக்கை



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை-பெரியநீலாவணை பகுதியிலுள்ள வடிகான்கள், குப்பைகள் மற்றும் மண்ணால் அடைக்கப்பட்டு கடந்த பல வருடங்களாக நிர்வாக இழுபறிகள் காரணமாக துப்புரவு செய்யப்படாமல் இருந்தமையினால் பாரிய துர்நாற்றம் வீசத் தொடங்கியதுடன், மழை நீர் வடிந்தோட முடியாத நிலையும் உருவாகியிருந்தது.

இது தொடர்பில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.அஸ்மியை நேரடியாக சந்தித்து சமூக செயற்பாட்டாளர் இசட்.ஏ. நௌஷாட் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய கல்முனை மாநகர ஆணையாளரின் பணிப்புரைக்கு இணங்க மாநகர ஊழியர்கள், சாரதிகள் இணைந்து குறித்த வடிகான்களை இரவு - பகலாக துப்புரவு செய்யும் பணியை ஆரம்பித்து முன்னெடுத்து வருகின்றனர்.

தெரியப்படுத்தி சில மணித்தியாலயங்களிலேயே நடவடிக்கை எடுத்த கல்முனை மாநகர ஆணையாளர், உதவி ஆணையாளர், சுகாதாரப்பிரிவினர், பொறியியல் பிரிவினர் உட்பட மாநகர உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு பொதுமக்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன், மூடிகள் இடப்படாத வடிகான்களுக்கு மூடிகளை இட துரித கதியில் நடவடிக்கை எடுக்குமாறும் கல்முனை மாநகர சபை நிர்வாகத்தை மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# பேராசிரியர் மர்ஹூம் காலிதீன் நினைவு கல்வி நிலையம் திறப்பு




(கந்தளாய் நிருபர்)

ஐ.எச்.எச். நிறுவனத்தின் அனுசரணையுடன் அல்-ஹித்மதுல் உம்மா பௌண்டேஷனின் ஏற்பாட்டில் பேராசிரியர் மர்ஹூம் கே.எம்.எச்.காலிதீன் நினைவு கல்வி நிலையம் கடந்த திங்கட்கிழமை (10) திறந்து வைக்கப்பட்டது.

இந்நினைவுக் கட்டடம் நிகழ்வின் பிரதம அதிதி ஐ.எச்.எச். பெல்ஜியம் நிறுவனத்தின் பிரதிநிதி செய்புல்லாஹ் கொச் இனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக அல்-ஹித்மதுல் உம்மா பௌண்டேஷனின் தலைவர் கஸ்ஸாலி முகம்மட் பாத்திஹ் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் ஏனைய அதிதிகளாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளரும் அல்-மத்ரசத்துல் காதரியா நிறுவகத்தின் தலைவருமான சட்டத்தரணி ஏ.ஸீ.எம்.முஸ்இல், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் அல் -மத்ரசத்துல் காதரியா நிறுவகத்தின் உப தலைவருமான அஷ்ஷெய்ஹ் ஹபீபுல்லா, காதரியா ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஆங்கில ஆசிரியர் எஸ்.ஏ.எஸ்.அமானுல்லாஹ், அல்-அஹ்ழா வித்தியாலயத்தின் அதிபர் கே.பிர்தௌஸ் ஆகியோருடன் பல பிரமுகர்களும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மர்ஹூம் பேராசிரியர் கே.எம்.எச்.காலிதீன் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கல்வி ஆளுமையும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உருவாக்குனர்களில் ஒருவருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 500 குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்ட உதவி



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி, பட்டணமும் சூழலும், மூதூர், தம்பலகாமம், கிண்ணியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழும் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், வீட்டுத்தோட்டம் செய்வதற்கு உதவி கோரிய 500 வறிய குடும்பங்களுக்கு அதற்குரிய நாற்றுகளையும் விதைகளையும் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் வழங்கியது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் இந்த உதவிகளை வழங்கிவைத்தார். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச்சங்க அலுவலர்கள், விவசாய சம்மேளன அலுவலர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். இந்த வீட்டுத்தோட்டம் செய்வதற்கான நாற்றுகளையும் விதைகளையும் வழங்குவதற்கான அனுசரணையை கனடா - திருகோணமலை நலன்புரிச் சங்கம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# தேசிய மட்டப் போட்டிக்கு மருதமுனை மாணவி தெரிவு



அகில இலங்கை தமிழ்மொழி தினப் போட்டியில் மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பத்தாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவி பாத்திமா ஜஸ்னா வலீத், கிழக்கு மாகாண மட்ட பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் மொழி தினப் போட்டியின்போதே இவர் தேசிய மட்டப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். இவர் கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாம் ஆண்டுக்கான சமூக விஞ்ஞான வினா விடைப் போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


இவர் மருதமுனையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.வலீத் - அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறின் தாஜ் தம்பதியின் புதல்வியாவார். இம்மாணவி தேசிய மட்டத்திற்குத் தெரிவானதையிட்டு பாடசாலை அதிபர் ஐ.உபைதுல்லா மற்றும் பாடசாலை சமூகத்தினர் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸ் தின நிகழ்விற்கான முன்னாயத்த நடவடிக்கை





(பாறுக் ஷிஹான்)



மாகாண மட்ட ரீதியாக இடம்பெறவுள்ள 156 ஆவது பொலிஸ் தின நிகழ்விற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை ஆராய்வதற்காக அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி கண்காணிப்பு விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்.


நாளை மறுதினம் சனிக்கிழமை (15) மாலை அம்பாறை நகர சபை மைதானத்தில் குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன், பொலிஸ் மா அதிபர் சீ.டீ.விக்ரமரத்ன உட்பட முக்கிய அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.


நேற்று குறித்த கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறியுடன் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டீ.ஜே.ரத்னாயக்கவும் இணைந்து மேற்குறித்த நிகழ்வின் முன்னாயத்த விடயங்களை ஆராய்ந்து பல்வேறு அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கினர்.

குறித்த நிகழ்வின் ஆரம்பத்தில் சர்வமத சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இதன்போது உயிர்நீத்த பொலிஸாருக்கு அவர்களின் உறவினர்களும் பொலிஸாரும் இணைந்து அஞ்சலி செலுத்தவுள்ளதுடன், தேசியக்கொடி மற்றும் பொலிஸாரின் கொடி என்பனவும் ஏற்றப்படவுள்ளன.

மேலும், 156 ஆவது பொலிஸ் தின நிகழ்வின் போது ஆண்-பெண் பொலிஸாரின் மரியாதை அணிவகுப்பு, விசேட அதிரடிப்படையின் நிகழ்வுகள், பொலிஸ் மோப்ப நாய்களின் சாகசங்கள், வர்ண வாணவேடிக்கை நிகழ்வு, குதிரைப்படை நிகழ்வு, மோட்டார் சைக்கிள் பவனி உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# உலக வங்கியின் உதவியுடன் மட்டக்களப்பு மாநகர சபையால் உள்ளூர் அபிவிருத்தி வேலைத்திட்டம்





(கல்லடி நிருபர்)

உலக வங்கியின் நிதி அனுசரணையில் உள்ளூர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பொருளாதாரத்தினை மீளமைத்துக் கொள்வதற்கான பங்களிப்பினைச் செய்யும் வகையில் எதிர்கால செயற்றிட்டங்களை வடிவமைத்துக் கொள்வதற்காகவும் மட்டக்களப்பு மாநகர சபையின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை கலந்துரையாடலொன்று (10) இடம்பெற்றது. இதன்போது உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்தல், உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தல், உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை விரிவுபடுத்தல் போன்ற பொதுவான தலைப்புகளில் விரிவுரைகள், தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதுடன், குழுக் கந்துரையாடல்களும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் த.சத்தியசீலன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

# சமாதான நீதவான்



நிந்தவூர் 13ஆம் பிரிவைச் சேர்ந்த முஹம்மது அனிபா முஹம்மது முர்ஷித், அகில இலங்கை சமாதான நீதவானாக ( Justice of the Peace for the Whole Island) நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அமைச்சால் நியமிக்கப்பட்டு, கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம்.முஹம்மட் றியால் முன்னிலையில் கடந்த புதன்கிழமை (05.10.2022) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

முஹம்மது அனிபா - சித்தி ஹனூன் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரான இவர், நீண்டகாலமாக கலை, இலக்கியம் மற்றும் ஊடகம்சார் துறைகளில் ஈடுபாடு காட்டிவருவதோடு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகவும் பணியாற்று கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவோரை சட்டத்தின்முன் நிறுத்த நடவடிக்கை!

## அமைச்சர் டக்ளஸ் திருகோணமலையில் அறிவிப்பு





(அப்துல்சலாம் யாசீம்)

சட்டவிரோத மீன்பிடியை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இச்செயற்பாடு காரணமாக மீன் இனம் முற்றாக அழிந்துவிடும். சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களை சட்டத்தின்முன் நிறுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

திருகோணமலை மாவட்ட மீனவ சங்கங் களுடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (11) உப்புவெளி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் நடைபெற்றபோதே அமைச்சர் மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

மீனவர்களுக்கான மண்ணெண்ணெயை சீராக வழங்க தற்போது இறக்குமதி செய்யப்படும் மண்ணெண்ணெய் போதுமானதாக காணப்பட வில்லை. எனவே, மண்ணெண்ணெயை தனியார் இறக்குமதி செய்வதற்கான அனுமதியை கோரியுள்ளோம். அவ்வனுமதி கிடைக்கப்பெறுமாயின் மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் பிரச்சினையைத் தீர்க்க முடியும். நாம் வருகை தந்தது மீனவர்களது பிரச்சினைகளை கலந்துரையாடி தீர்ப்பதற்கேயாகும். மீனவர்களது நியாயமான கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட்டு தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க மீனவ சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அமைச்சு, திணைக்களம் மற்றும் மீனவ சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே இப்பிரச்சினையை தீர்க்க முடியும். வெறுமனே ஒரு தரப்பிற்கு மாத்திரம் இதனைத் தடுக்க முடியாது .

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பல மீனவ சங்கங்கள் இதன்போது தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்தன. குறித்த கோரிக்கைகளை தமக்கு எழுத்துமூலம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது அமைச்சர் கேட்டுக்கொண்டார். அதிகமான பிரச்சினைகளை அமைச்சர் ஆழமாக ஆராய்ந்து சில பிரச்சினைகளை உரிய அதிகாரிகளை தொடர்புகொண்டு தீர்க்க முற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில்m திருகோணமலை மாவட்ட மீன்பிடிj; திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# போடியார் புலம்பல்!



**வாழைச்சேன கடதாசி ஆலயின் உற்பத்திய அதிகரிச்சா சம்பளத்த கூட்டலாமாம் எண்டு இராசாங்க அமைச்சர் சாமர சம்பத் என்பவர் முந்த நாள் வாழைச்சேனக்கு சென்று சொல்லி இருக்காரு எலுவா?**

**அடே கடந்த 2010இல இருந்து இதத்தானே எல்லா அரசாங்க தரப்பும் சொல்லுயல். உற்பத்திக்கு மூலப்பொருள் எங்க இருந்து எடுக்கிறடாம்பி. சும்மா படம் காட்டாம வேற கதகள கதயுங்க!**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தினால் புத்தாக்கச் செயற்பாடுகளை ஊக்குவிக்க செயலமர்வு







(நூருல் ஹுதா உமர்)

புத்தாக்கச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயலமர்வு அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ரஹ்மதுல்லாஹ் தலைமையில் அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அல்-ஹம்றா மகா வித்தியாலயம், அல்-மின்ஹாஜ் மகா வித்தியாலயம், அல்-முனிறா மகளிர் தேசிய பாடசாலை, ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி, அஸ்சிறாஜ் மகா வித்தியாலயம் மற்றும் அல்-இர்ஃபான் மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

கல்வி அமைச்சினால் SESIP செயற்திட்டத்தி னூடாக ஆறு பாடசாலைகளுக்கும் தலா எட்டு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களது கண்டுபிடிப்புகளை வணிகமயப்படுத்துவதற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கும் பாடசாலைகளில் புத்தாக்க கழகங்களை நிறுவுவதற்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

மேலும், இளம் விஞ்ஞானி எஸ்.வினோஜ்குமார் வளவாளராகக் கலந்துகொண்டு புத்தாக்கம் மற்றும் ஆக்கவுரிமைப்பத்திரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினார். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வலயக்கல்விப் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில்,

மாணவர்களுக்கு புள்ளிகளை நோக்காக மட்டும் கல்வித் திட்டம் கொண்டிராமல் புத்தாக்கத்தி னூடாக எதிர்கால சவால்களை சமாளிக்க மாணவர்களுக்கு இவ்வாறான புதிய திட்டத்தை கல்வி அமைச்சு ஆரம்பித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். இதற்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் இணைப்பாடங்களில் இதனை உள்வாங்கி, மாணவர்களுக்கு நல்ல தெளிவூட்டல்களை வழங்கவேண்டும்.

தற்போது நமது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்பதற்கு புதிய கண்டுபிடிப்புகள் மிக முக்கியமானவை. எதிர்வரும் டிசம்பர் மாதம் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளையும் ஒன்றிணைத்து புத்தாக்க கண்காட்சியொன்றை நடத்தவுள்ளோம். அதில் சிறந்த கண்டுபிடிப்புகளை கல்வி அமைச்சினூடாக வணிகமயப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோம். இந்த வருடம் இலங்கையிலுள்ள 750 பாடசாலைகளுக்கு இந்நிதி வழங்கப்பட்டுள்ளது. அதில் எமது வலயத்தைச் சேர்ந்த ஆறு பாடசாலைகளுக்கு இந்நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. இதனூடாக எமது வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சந்தர்ப்பங்களை வழங்கவுள்ளோம்.

மேலும் இந்நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கு துணை நிற்கும் பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமாவுக்கும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஹசீனுக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.டி.எம்.ஜனோபருக்கும், இளம் விஞ்ஞானி சோ.வினோஜ்குமாருக்கும் மற்றும் அதிபர்கள் ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# மாணவி ஒருவரை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த அதிபர் கைது

## மட்டக்களப்பில் சம்பவம்

(கனகராசா சரவணன்)




மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் 19 வயது மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த பாடசாலை அதிபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது,

க.பொ.த. உயர் தரத்தில் கற்றுவரும் மாணவி ஒருவர் விடுதியில் இருந்துகொண்டு வேறொரு பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார். இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதி விடுதி அமைந்துள்ள பாடசாலை அதிபர் மாணவியை தனது காரியாலயத்திற்கு வரவழைத்து அந்த மாணவி மீது பாலியால் சேட்டை விட முயற்சித்துள்ளதையடுத்து அங்கிருந்து மாணவி தப்பி ஓடியுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அறிந்த 4 பேர்கொண்ட குழுவினர் கடந்த மாதம் 4ஆம் திகதி பாடசாலைக்குச் சென்று தாம் சி.ஐ.டி. என தெரிவித்து அதிபரை தாக்கியதுடன், அவரை தாக்கியபோது வீடியோ படம் எடுத்துள்ளனர். இந்த அதிபர் மீது தாக்குதல் நடத்திய வீடியோ படம் வெளியாகியதையடுத்து இதனை அறிந்த பாதிக்கப்பட்ட மாணவி சம்பவதினமான கடந்த திங்கட்கிழமை மாலை மட்டு. பொலிஸ் நிலையத்தில் அதிபருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவியை வைத்தியசாலையில் சேர்த்ததுடன், அதிபரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து கைது செய்துள்ளனர்..

இதேவேளை, அதிபர் தன்மீது சி.ஐ.டி. எனத் தெரிவித்து 4 பேர் தாக்குதல் நடத்தியதாகவும் அவர்களை அடையாளம் தெரியாதெனவும் தெரிவித்து, வெளியாகிய வீடியோவை ஆதாரமாக வழங்கி தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக அதிபர் மாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுமதியின்றி மண் ஏற்றிவந்த உழவு இயந்திரங்களுக்கு அபராதம்

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமில்லாமல் ஆற்றுமணல் ஏற்றிவந்த உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மற்றும் ஆலீம் நகர் ஆகிய வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து அனுமதிப்பத்திரமில்லாமல் ஆற்றுமணல் ஏற்றிவந்த உழவு இயந்திரங்களை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த உழவு இயந்திரங் களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை (10) ஆஜர்படுத்தியபோது இரு வாகனங்களுக்கும் தலா 50,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனங் களும் விடுவிக்கப்பட்டன.

# இரண்டாம் மொழி சிங்களக் கற்கைநெறி பூர்த்தி விழா



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை உத்தியோகத்தர்களின் வேதன ஏற்றம் மற்றும் வினைத்திறனான சேவை வழங்கும்பொருட்டு அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 150 மணித்தியாலயம் கொண்ட சிங்கள கற்கைநெறியை பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களுக்கு கடந்த திங்கட்கிழமை (10) சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நடத்தப்பட்ட இந்நிகழ்வில், பணிப்பாளருடன் இணைந்து பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ.வாஜித்தும் கலந்துகொண்டு பங்குபற்றுனர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் இக்கற்கைநெறியை திறன்பட நடத்தி முடிக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்கள். மேலும் ஜனாப் பாசித் முகைதீன் இக்கற்கைநெறிக்கான இணைப்பாளராக கடமையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் ஆயுள்வேத இலவச மருத்துவ முகாம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சின் அனுசரணையில் முதியோர் தினத்தை முன்னிட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஆயுர்வேதப் பிரிவின் ஏற்பாட்டில், கல்முனைக்குடி சுஹறா வித்தியாலயத்தில் இலவச வைத்திய முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வைத்தியர் எம்.ஏ.நபீல் தலைமையில் இடம்பெற்ற இவ்வைத்திய முகாமில், கல்முனைக்குடியிலுள்ள முதியோர் சங்க உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு வைத்திய உதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.ரிபாஸ் மற்றும் கல்முனை பிரதேச செயலாளர் ஐ.லியாக்கத் அலி, கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி ஏ.சீ.எம்.மாஹிர், பிரதிப் பணிப்பாளர் ஏ.டபிள்யூ.வாஜித், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் மதுசூதனன் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முதியோர் சங்கத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# பெண் எழுத்தாளர் மாநாடு நவம்பரில்

(பாறுக் ஷிஹான்)



Srilanka pen clubஇன் இவ்வாண்டிற்கான தேசிய பெண் எழுத்தாளர் மாநாடு எதிர்வரும் நவம்பர் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளதாக அதன் ஸ்தாபகத் தலைவர் சம்மாந்துறை மஷூறா தெரிவித்தார்.

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இம் மாநாட்டிற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தொடர்பான முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் (11) மாலை 4 மணியளவில் Srilanka pen club தலைவி சம்மாந்துறை மஷூறா தலைமையில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இதுவரை அறுபத்தைந்து பெண்கள் விண்ணப்பித்துள்ளனர் என்றும், பெண்ணிலக்கியம் சார்ந்த உரைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் நிகழ்வுகள் களைகட்டவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கூட்டத்திற்கு சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, சாய்ந்தமருது, மருதமுனை அங்கத்தவர்கள் சமுகமளித்திருந்தனரென்பதும் குறிப்பிடத்தக்கது.






**சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை சோனகவாடி நவாத்துல் உளூம் முன்பள்ளியில் சிறுவர் தின நிகழ்வுகள் அதிபர் வசீலா மஹ்ரூப் தலைமையில் நடைபெற்றன.**

**இதில் அதிதிகளான ஜி.எச்.தமரா கீதானி (வேலைத்திட்டப் பணிப்பாளர் முன்பள்ளி), வர்த்தகப் பிரமுகர் ஏ.ஆர்.எம்.ராபி, எஸ்.தற்சாந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.சி.எம்.அஸ்வர் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், பரிசில்கள் வழங்கப்படுவதையும், அதிபர் பிரதம அதிதிக்கு நினைவுப்பரிசில் வழங்குவதையும், முன்பள்ளியின் ஆசிரியை அமீர் இர்பானா அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.**

**(படங்கள்:- கந்தளாய் நிருபர்)**

# மகளிர் ஆசியக்கிண்ண அரையிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பம்; பாகிஸ்தானை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழையுமா இலங்கை?



பங்களாதேஷில் கடந்த முதலாம் திகதி முதல் நடைபெற்றுவரும் 2022 மகளிர் ஆசியக்கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறுகின்றன.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் முதல் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய மகளிர் அணி, தாய்லாந்து மகளிர் அணியை எதிர்கொள்கிறது. தாய்லாந்து மகளிர் அணியானது அண்மையில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி அதிர்ச்சியளித்த நிலையில், பங்களாதேஷ் அணியுடனான போட்டி மழையால் கைவிடப்பட ஆசியக்கிண்ண வரலாற்றில் முதன்முறையாக அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்றது. இதன்மூலம் நடப்பு சம்பியன் பங்களாதேஷ் தொடரிலிருந்து வெளியேறியது.

மறுமுனையில் புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்த பாகிஸ்தான் அணியும் மூன்றாவது இடத்தைப் பிடித்த இலங்கை அணியும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இன்றைய தினம் பிற்பகல் 1.00 மணிக்கு மோதுகின்றன. இலங்கை மகளிர் அணி முன்னதாக ஆடிய பாகிஸ்தான் மகளிர் அணியுடனான ஆட்டத்தில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன் பட்டத்துடன் தேசிய மட்டத்துக்கு தெரிவான கல்முனை சாஹிரா கல்லூரி






(மாளிகைக்காடு நிருபர்)

திருகோணமலை - கந்தளாய் லீலாரத்ன விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த பாடசாலை களுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 4 × 100 மீ. அஞ்சலோட்டத்தில் முதலாமிடத்தை பெற்று தங்கப் பதக்கத்தையும், 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 4 × 100 மீ. அஞ்சலோட்டத்தில் இரண்டாமிடத்தை பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 4 × 400 மீ. அஞ்சலோட்டத்தில் மூன்றாமிடத்தை பெற்று வெண்கலப் பதக்கத்தையும் வென்று கிழக்கு மாகாண ரிலே சம்பியனாக கல்முனை சாஹிரா கல்லூரி தெரிவானது.

அத்துடன் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 110 மீ. தடைதாண்டல் ஓட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும், 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 400 மீ. தடைதாண்டல் ஓட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்துள்ளார்கள்.

இம்மாணவர்கள் இன்னும் பல பயிற்சிகளை மேற்கொண்டு 2022ஆம் ஆண்டுக்கான தேசிய ரீதியில் நடைபெறவுள்ள போட்டிகளில் முதலாமிடத்தை பெற்று பாடசாலைக்கும், கிழக்கு மண்ணுக்கும் மென்மேலும் பெருமை சேர்க்க வேண்டுமென பலரும் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

# மருதமுனை அல்-மதீனா வித்தியாலய மாணவனுக்கு தங்கப் பதக்கம்



(மருதமுனை நிருபர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக் கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டு விழா - 2022 அண்மையில் திருகோணமலை - கந்தளாய் லீலாரத்ன விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது மருதமுனை அல்-மதீனா வித்தியாலய மாணவன் முகமட் முபீன் சஸாட் முஹம்மட் 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு வீசுதல் போட்டியில் 10.95 மீற்றர் தூரம் குண்டறிந்து முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்று அகில இலங்கை மெய்வல்லுனர் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 2009ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் சார்பில் மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டியில் பெறப்பட்ட முதல் தங்கப் பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com




# 19 ஆண்டுகால ஆஸி.யின் சாதனையை சமன் செய்த இந்தியா




தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய இந்திய அணி அவுஸ்திரேலியாவின் சாதனையை சமன் செய்தது. தென்னாபிரிக்க அணியுடன் நேற்று முன்தினம் பெற்ற வெற்றியுடன் டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 போட்டி என அனைத்து வடிவங்களிலும் சேர்த்து இந்திய அணி இவ்வருடத்தில் தற்போது வரை 38 வெற்றிகளைப் பெற்றுள்ளது. இதன்மூலம் இந்திய அணி 19 ஆண்டுகால அவுஸ்திரேலிய அணியின் சாதனையை சமன் செய்தது.

2003ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய அணி அவ்வருடத்தில் மொத்தம் 38 போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தது. இதுவே ஒரு வருடத்தில் ஒரு சர்வதேச அணி பெற்ற அதிக வெற்றியாக இருந்தது.

# வெற்றியீட்டிய புறா வளர்ப்பாளர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு





(இக்பால் அலி)

ஏசியன்ஸ் செலன்ஸ் புறாப் போட்டில் வெற்றியீட்டிய புறா வளர்ப்பாளர்களுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவம் அண்மையில் அம்பதென்ன காசல் பார்க் மண்டபத்தில் ஏசியன்ஸ் செலன்ஸ் புறா வளர்ப்புக் கழகத்தின் தலைவர் எம்.எச்.எம்.அஜ்மீர் நடைபெற்றது.

கிளிநொச்சியில் இருந்து அக்குறணைக்கு 250 கிலோ மீற்றர் வான் பரப்புத் தூரத்தில் 600 புறாக்கள் கலந்துகொண்ட போட்டியில் ஏ.எச்.பாசியின் புறா முதலாம் இடத்தைபெற்று சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. எம்.நிஸ்மியின் புறா இரண்டாம் இடத்தையும் எம்.ஜே.எம்.ஜரூக்கின் புறா மூன்றாம் இடத்தையும் முறையே பெற்றுக் கொண்டன. இந்நிகழ்வில் இலங்கையில் பல பாகங்களிலும் உள்ள புறா வளர்ப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# டி மரியா வெளியேறியதால் ஆர்ஜென்டீனாவுக்குப் பின்னடைவு



(ரமணி)

மக்காபி ஹைஃபாவில் செவ்வாயன்று நடந்த ஜுவென்டஸ் சம்பியன்ஸ் லீக் ஆட்டத்தில் ஏஞ்சல் டி மரியா வெளியேறியதைத் தொடர்ந்து உலகக்கிண்ணப் போட்டிக்கு முன்னதாக ஆர்ஜென்டீனாவுக்கு மேலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

டி மரியா முதல் பாதியில் ஒரு பந்துக்காக ஓடிக்கொண்டிருந்தார். அப்போது அவர் தனது வலது தொடையின் பின்புறத்தைப் பிடித்துக் கொண்டு வலியில் துடித்தார். டி மரியாவின் உடல்நிலை குறித்த விவரங்களை ஜுவென்டஸ் அணி உடனடியாக வழங்கவில்லை. கடந்த வாரம் ஜுவென்டஸ், ஹைஃபாவை 3-1 என தோற்கடித்தபோது மூன்று கோல்களையும் அடிப்பதற்கு டி மரியா உதவினார்.

ரோமா அணிக்காக விளையாடும்போது சக அர்ஜென்டீன வீரர் பாலோ டிபாலா காயமடைந்த சில நாட்களுக்குப் பிறகு இச்சம்பவம் நடந்துள்ளது. லியோனல் மெஸ்ஸிக்கு சிறிய காயம் ஏற்பட்டுள்ளதால் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பியன்ஸ் லீக்கில் பென்ஃபிகாவுக்கு எதிரான பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன் ஆட்டத்தில் அவர் பங்கேற்கவில்லை.கட்டாரில் நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டியில் பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றான ஆர்ஜென்டீனா நவம்பர் 22ஆம் திகதி சவூதி அரேபியாவுக்கு எதிராக முதல் போட்டியில் விளையாடுகிறது. சி பிரிவில் மெக்சிகோவையும் போலந்தையும் அந்த அணி எதிர்கொள்கிறது.

திருமண தேடல் விளம்பரங்களை **இலவசமாக** பிரசுரித்துக்கொள்ள அரிய வாய்ப்பு!

“உங்களுடைய அன்பான மகன் / மகளின் திருமணத்துக்கு பொருத்தமான துணையை தேடுகிறீர்களா? வட்ஸ்அப் ஊடாக எமக்கு விபரங்களை அனுப்பி வையுங்கள்!”



தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள எமது வட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு
தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900.
தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

thamilaneditor@gmail.com

விவாஹா

# வேக நடைப் போட்டியில் ஊவா - மேல் மாகாணங்கள் சம்பியன்







நெஸ்லே நெஸ்டமோல்ட் அனுசரணையில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் கம்பஹாவில் நடைபெற்ற 47ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளின் வேக நடைப் போட்டியில் ஆடவர் பிரிவில் ஊவா மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய ஆர்.எம்.டி ருக்மால் பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 34 நிமிடம் 08 வினாடிகளில் கடந்து முதலிடத்தை பிடித்து வெற்றியாளரானார்.

மகளிர் பிரிவில் மேல் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திக் களமிறங்கிய யு.வீ. கல்ஹாரி மதிரிகா பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 50 நிமிடம் 58 வினாடிகளில் கடந்து முதலிடத்தை கைப்பற்றினார்.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7